விலை: 30.00
பக்கங்கள் : இருபது
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 19 புதன்கிழமை (04.08.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 228




## கொரோனா +2,423

(கொழும்பு)
நாட்டில்மேலும்2,423பேருக்கு கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி 19



## ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு
## தற்போதைய சூழ்நிலைக்கு சாத்தியமில்லை
### அமைச்சரவை பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல

(கொழும்பு)
ஆசிரியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தற்போதைய சூழ்நிலையில் முடியாது என்பதே அரசாங்கத்தின் நிலைப்பாடாகுமென்று கல்வி அமைச்சரினால் ஆசிரியர் சங்கங்களுக்கு அறிவிக்கப்படும் என்று அமைச்சரவை பேச்சாளரும் 19




### நாட்டில் தற்போது பரவும் டெல்டா
# 15 வினாடிக்குள் பலருக்கு பரவும் வீரியமுடையது
### சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

(கொழும்பு)
**நாட்டில் பரவிவரும் கோவிட் - 19 வைரஸின் டெல்டா திரிபு மிகவும் கடுமையானது என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.**

**இந்த டெல்டா திரிபு 15 வினாடிகளுக்குள் பலருக்கு பரவும் வீரியமுடையது என்று அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.**

முன்னதாக நாட்டின் பிற பகுதிகளுக்கு பரவிய கொரோனா வைரஸ் 15 முதல் 30 நிமிடங்களுக்குள் மற்றவர்களுக்கு பரவியதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

டெல்டா வைரஸ் பாதிப்பு இந்தியா மற்றும் பிரிட்டன் உட்பட பல நாடுகளை பாதித்துள்ளது.

இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் டெல்டா திரிபு தொற்றால் பாதித்தவர்கள் உள்ளனர் என்று சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-3)

### கொரோனாவால்
## மன்னாரில் பெண் மரணம்

(மன்னார்)
கொரோனாத் தொற்றால் மன்னா 19

## அரச அமைச்சர் மகிந்தானந்தவுக்கு கொரோனா

(கொழும்பு)
அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகேவிற்கு கோவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவருக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையின் அடிப்படையில் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-3)

## சுயதனிமையில் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில

(கொழும்பு)
எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தன்னை சுயதனிமைப் படுத்தலுக்கு உட்படுத்திக் கொண்டுள்ளார்.

அமைச்சின் பல 19

## கோவிட் தொற்றால் 74 பேர் மரணம்
### மொத்த உயிரிழப்பு 4,645 ஆக உயர்வு

(கொழும்பு)
கோவிட் தொற்றால் நாட்டில் மேலும் 74 பேர் மரணித்துள்ளதாக அறிக்கையிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் இதுவரையில் பதி 19

### 12 முதல் 18 வயது வரையான
## மாணவர்களுக்கு விரைவில் பைசர் தடுப்பூசி

(கொழும்பு)
நாட்டில் 12 முதல் 18 வயது வரையான பாடசாலை மாணவர்களுக்கு பைசர் கோவிட்-19 தடுப்பூசி போடுவது குறித்துப் பரிசீலித்து வருவதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜெயசுமன 19

### யாழ்.போதனாவுக்கு செல்வோர்
## தடுப்பூசி அட்டையுடனே செல்ல வேண்டும்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு செல்வோர் கொரோனா தடுப்பூசி அட்டையுடனேயே செல்ல வேண்டும் என வைத்தியசாலை பணிப்பாளர் ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்தார். 19

## கோவிட் கட்டுப்பாடுகளை தளர்த்துவது எரியும் தீயில் எரிபொருளை சேர்ப்பதாகும்
### மருத்துவ நிபுணர்கள் சங்கம் எச்சரிக்கை

(கொழும்பு)
டெல்டா மாறுபாடு கண்டறியப்படும் நிலையில், நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் கோவிட் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவது எரியும் தீயில் எரிபொருளைச் சேர்ப்பது போன்றது என்று ஏ.எம்.எஸ் என்ற மருத்துவ நிபுணர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. 19

### யாழில் 42 பேர் உட்பட
## வடக்கில் மேலும் 50 பேருக்கு கோவிட்

(யாழ்ப்பாணம்)
யாழ்.குடாநாட்டில் 42 பேர் உட்பட வடக்கில் மேலும் 50 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

### கொரோனாவால்
## யாழில் இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்துள்ளனர்.
[illegible] 19

## கடந்த மே மாதத்தில் இருந்த நிலைமைக்கு நாடு செல்லும்
### விசேட மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

(கொழும்பு)
கோவிட் வைரஸின் டெல்டா திரிபு பரவி வருவதன் காரணமாகவே தொற்றாளர்கள் எண்ணிக்கை அதிகரிக்கிறது என பரவலாக நம்பப்படுவதாக தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவின் விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்துள்ளார். 19

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தெல்லிப்பழை சுகாதார பிரிவில் 6 பெண்கள் உட்பட 10 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் பெண்கள் 6 பேர் உட்பட 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு 10 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பெண்கள் - 06 பேர் (30, 32, 34, 42, 56, 65 வயதுடையவர்கள்)

ஆண்கள் - 04 பேர் - (30, 31, 37, 41 வயதுடையவர்கள்)

தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 54 பேரின் மாதிரிகள் இவ்வாறு பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில் 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (ம-03)

## அரச ஊழியர்களின் போக்குவரத்து வசதிகளுக்காக

### கூடுதலான பஸ், ரயில் சேவையில் ஈடுபடும்

(கொழும்பு)

அனைத்து அரச ஊழியர்களையும் கடந்த 2 ஆம் திகதி முதல் சேவைக்கு அழைப்பு விடுத்ததை அடுத்து, அவர்களுக்கு போக்குவரத்து வசதிகளை வழங்கும் நோக்கில், அதிகளவான ரயில்கள் மற்றும் பஸ்களைச் சேவையில் ஈடுபடுத்த போக்குவரத்து அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், சுகாதார வழிகாட்டுதல்களுக்கு உட்பட்டதாக போக்குவரத்து சேவைகள் இடம்பெறும் என்று போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.



அத்துடன், அலுவலக நேரங்களில் பயணிகள் போக்குவரத்து நடவடிக்கைகள் வழமை போல் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-03)

## வடமாகாணத்தின் பிரதம செயலாளராக சிங்களவரை நியமித்தமை

### ராஜபக்ச அரசின் எதேச்சாதிகாரம்

### பாராளுமன்றில் சிறிதரன் எம்.பி

(கொழும்பு)

இலங்கை அரசியல் அமைப்பின் 13ஆவது திருத்தத்தை புறந்தள்ளி, சிங்கள மொழிபேசுகின்ற ஒருவரை வட மாகாணத்தின் பிரதம செயலாளராக நியமித்துள்ள விடயமானது ராஜபக்ச அரசாங்கத்தின் எதேச்சாதிகார மற்றும் சர்வாதிகார போக்கையே காட்டுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் குற்றம் சுமத்தினார். நேற்று பாராளுமன்றில் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

சிங்களத் தலைவர்களும் இலங்கை அரசாங்கமும் புரிந்துகொள்ளாத வரையில்நாடு முன்னோக்கிப் பயணிப்பது சாத்தியமாகாத விடயம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் வலியுறுத்தியுள்ளார்.

ஆயிரக்கணக்கான உயிர்களை இழந்த பின்னரும் தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை காணப்படுவதாகவும், அதற்கு ஒரு தீர்வு வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். (ம-03)


**விற்பனைக்கு**

சணல் ஆட்டுக் கிடாய் விற்பனைக்கு உண்டு.

(7549)

**077 978 9375**
**077 652 0529**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

**வேலையாள் தேவை**

யாழ். நகரில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றிற்கு பேக்கரி வேலை தெரிந்த வேலையாட்கள் உடன் தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு (7552)

**077 165 3770**

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1983 இல் பிறந்த சூரியன் செவ்வாய் 10, ரோகிணி நட்சத்திரம்,இடபராசி முதலாம் பாதம் தனியார் வர்த்தக நிலையத்தில் பணி புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை.

☎-077 582 7035 (7556)

உ
நாகபூசணி அருளுடன்
வெற்றிப் பரிசுகள் குவியும் யாழ் நகரம்
மீண்டும்
**10 இலட்சம் 02.08.2021**
**சனிக்கிழமை அதிர்ஷ்டம் DLB**

ஜாதிக சம்பத - ஒரு இலட்சம் வெல்லப்பட்டுள்ளது.
தவிர.

அதிர்ஷ்டத்தின் ஆசீர்வாதம் தேசிய லொத்தர் சபை NLB வழங்கிய 16.07.2021 அன்று.

1 கோடி 83 இலட்சம் மற்றும் தனநிதானய 10 இலட்சம், ஜாதிக சம்பத 20 இலட்சம், ஒரு இலட்சம் பல....

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர் சபை DLB,


அதகோடிபதி 10 இலட்சம் மற்றும் இலட்சாதிபதிகள் பல சுப்பர்போல், சனிதா, சசிரி, அதகோடிபதி

தொடர்ந்து வெல்லப்பட்டு வருகின்றன. எனவே நீங்கள் நகரமெங்கும் விற்பனைக் கூடாரங்கள், துவிச்சக்கர வண்டிகளில் லொத்தர்(பரிசுச் சீட்டுகள்) பெற்றுக்கொள்ளலாம்.
தோல்வி நிலையற்றது. வெற்றி நிச்சயமானது.

என்றும் மக்கள் மனமறிந்த வெற்றி முகவர்கள்
S. கனகலிங்கம் திலகவதி
இல.4, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(7545)


**பாராட்டு**
**வாழ்த்துகின்றோம்**

Best Wishes



வடமராட்சி கல்வி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளராக கடந்த 2 ஆம் திகதி திங்கட்கிழமை பதவியேற்ற எமது அன்பு நண்பன்

**திரு. கனகசபை சத்தியபாலன்**

( B.A, PGDE, PGDEM, M.Ed., SLEAS )

வலயக் கல்விப் பணிப்பாளர், வடமராட்சி

அவர்களை பாராட்டி வாழ்த்துவதுடன் அவரின் கல்விப்பணி மேலும் சிறப்புற இறையருள் வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் : நண்பர்கள்

(இ)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 19 - 10 - 1953 | 04 - 08 - 2011 |



அமரர் திருமதி

**சறோஜினிதேவி தர்மலிங்கம்**

ஆண்டுகள் பத்து சென்றாலும் என்றென்றும் உங்கள் நினைவுகளுடன் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(C-2458)

பழைய ஆஸ்பத்திரி வீதி,
கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “கொத்தலாவல சட்டமூலம் எமக்கு வேண்டாம்”

# எட்டு அமைப்புகள் ஒன்றிணைந்து போராட்டம்

**(யாழ்ப்பாணம்)**

**எமது நாட்டின் இலவசக் கல்வி மேலும் ஜனநாயகமாக்கப்படல் வேண்டும் எனவும் பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் இடம்பெறும் அரசியல் தலையீடுகளை எதிர்க்க வேண்டும் எனக் கோரியும் இன்று நண்பகல் 12 மணிக்கு யாழ். பல்கலைக்கழகம் முன்பாக நடைபெறும் அமைதிப் போராட்டத்தில் பங்கேற்குமாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.**

இது தொடர்பில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக் கழக ஊழியர் சங்கம், யாழ். பல்கலை. மாணவர்கள், இலங்கை ஆசிரியர் சங்கம், சமூக நீதிக்கான வெகுஜன இயக்கம், வல்லமை, புதிய அதிபர் சங்கம், முற்போக்கு ஜனநாயக ஆசிரியர் சங்கம் ஆகிய பொது அமைப்புகள் இணைந்து நேற்று வெளியிட்ட ஊடக அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தன.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தற்போதைய அரசாங்கம் தனக்குள்ள கூடுதல் பெரும்பான்மைப் பலத்தினைப் பிரயோகித்து கொத்தலாவல தேசிய பாதுகாப்பு சட்டமூலத்தை நிறைவேற்ற முற்படுவதனை எதிர்ப்பது எமது வரலாற்றுக் கடமையாகும். அத்துடன் கல்விக்கான நிதி ஒதுக்கீட்டினை அதிகரிப்பதுடன் கல்விச் சாலைகளில் பணிபுரியும் யாவரும் ஏற்றத்தாழ்வுகள் அற்றவகையில் கௌரவத்துடன் தமது சேவைகளை வழங்குவதை உறுதி செய்யவேண்டும்.

உட்கட்டுமான வசதிகளும் மனித வளங்களும் அதிகரிக்கப்பட்டு ஏற்கனவே இருக்கும் இலவசக் கல்விச் சூழல் மேலும் விரிவாக்கப்பட்டு ஜனநர்யகமயப்பட வேண்டும்.

இராணுவ மயமாக்கம், தனியார் மயமாக்கம், கல்வியில் அரசியல் தலையீடுகள், இலவசக் கல்வியை நிர்மூலமாக்கி விடும்.

இதை எதிர்த்து போராட்டத்தில் பங்கேற்குமாறு பல்கலைக்கழக சமூகம் அழைத்து நிற்கிறது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. ( நி-5-18)

## றிசாத்தை கட்சியிலிருந்து இதுவரை நீக்கவில்லை

### எதிர்க்கட்சி மீது குற்றச்சாட்டு

(கொழும்பு)

றிசாத் பதியுதீனை கட்சியில் இருந்து இடைநீக்கம் செய்ய எதிர்க்கட்சி இது வரை எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என ஆளும்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கும்போதே பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் றிசாத் பதியுதீனின் வீட்டில் பணிபுரிந்த நிலையில் உயிரிழந்த 16 வயது சிறுமி தொடர்பான அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் அரசாங்கம் எடுத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

## சேமலாப நிதியத்தில் இருந்து பணம் எடுப்பதற்கு வரி அறவிடப்படாது

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

ஊழியர் சேமலாப நிதியத்தில் இருந்து பணம் எடுப்பதற்கு எந்தவிதமான வரியையும் விதிப்பதற்கு திட்டமிடவில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண இது குறித்து கேள்வி எழுப்பியிருந்தார்.

குறித்த கேள்விக்கு பதிலளிக்கும்போதே நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் இதனைத் தெரிவித்தார்.

மேலும் ஊழியர் சேம நிதிக்கு வரி விதிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக வெளியிடப்படும் செய்திகள் பொய்யானவை என்றும் குறிப்பிட்டார். (நி-5)

## கல்விக்கான தேசிய வானொலி அலைவரிசை விரைவில் ஆரம்பம்

### அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

நாட்டில் அனைத்து மாணவர்களும் பயன் பெறக்கூடிய வகையில் கல்விக்கான தேசிய வானொலி அலைவரிசையொன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

கொவிட்-19 தொற்று நிலைமையை கருத்திற்கொண்டு மாணவர்களின் கல்வியில் கவனம் செலுத்தி இதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

## தடுப்பூசி அட்டை இல்லாவிடில் பெரும் நெருக்கடிக்குள்ளாக நேரிடும்

### அஜித் ரோஹண தெரிவிப்பு


(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைக்கு மேலதிகமாக கொவிட் தடுப்பூசி அட்டையை தம்முடன் வைத்துக் கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் நாட்களில் கட்டாயமாக்கப்படும் என சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

கொவிட் தடுப்பூசிகளை நிராகரிக்கும் மக்கள் எதிர்வரும் நாட்களில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்வேறு நிகழ்வுகளுக்கு செல்லும் போது கொவிட் தடுப்பூசி கட்டாயமாகும் என சுட்டிக்காட்டிய அவர் கொவிட் தடுப்பூசிகளை நிராகரிக்கும் மக்கள் தொடர்பில் உரிய சுகாதார அதிகாரிகள் மற்றும் பொலிஸாருக்கு தெரியப்படுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5)



வரலாற்றுச் சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவை முன்னிட்டு கொடிச்சீலை வடிவமைப்பாளர்களிடம் காளாஞ்சி கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை இடம்பெற்றது. கொடிச்சீலை [illegible] சி மாட்டுவண்டில் மூலம் நல்லூரிலிருந்து கல்வியங்காட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டு கலாசார முறைப்படி பெருந்திருவிழாவுக்கான பத்திரிகையும் காளாஞ்சியும் கையளிக்கப்பட்டன. (படங்கள்: சிவசாந்தன், ரவிசாந்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில் வீழுமா? வீழ்த்துமா?

## இங்கிலாந்து, இந்தியா டெஸ்ட் இன்று ஆரம்பம்




இந்திய அணி கடைசியாக இங்கிலாந்தில் 2007 ஆம் ஆண்டு 3 போட்டி கொண்ட டெஸ்ட் தொடரை 1-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. விராட் ஹோலி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி 5 டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்காக இங்கிலாந்து சென்றுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி நாட்டிங்காமில் உள்ள டிரென்ட்பிரிட்ஜ் மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. இந்திய அணி வெற்றியுடன் கணக்கை தொடங்குமா என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. சமீபத்தில் இங்கிலாந்தில் நடந்த ஐ.சி.சி. உலக டெஸ்ட் சம்பியன் ஷிப் இறுதிப் போட்டியில் நியூசிலாந்திடம் தோற்றது. இதனால் இங்கிலாந்துக்கு எதிராக திறமையுடன் ஆட வேண்டிய நிலையுள்ளது.

இரு அணிகளும் இன்று மோதுவது 127 ஆவது டெஸ்ட் ஆகும். இதுவரை நடந்த 126 போட்டியில் இந்தியா 29 இல், இங்கிலாந்து 48இல் வெற்றி பெற்றுள்ளன. 49 டெஸ்ட் 'டிரா' ஆனது. இந்த டெஸ்ட் போட்டி இன்று பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகிறது. (4)

## கவனத்தை ஈர்த்த போட்டி

# தங்கப் பதக்கத்தை பகிர்ந்து கொண்ட இத்தாலி, கட்டார் வீரர்கள்

டோக்கியோ ஒலிம்பிக்கில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான உயரம் பாய்தல் போட்டி அனைவரின் கவனத்தையும் பெற்றது மட்டுமல்லாது அது அனைவர் மத்தியிலும் பேசு பொருளாக மாறியுள்ளது.

டோக்கியோ ஒலிம்பிக்கில் ஆண்களுக்கான உயரம் பாய்தலில் இத்தாலியின் ஜியான் மார்கோ தம்பேரி இறுதிப் போட்டியில் கட்டாரின் முடாஸ் எஸ்ஸா பார்ஷிமை எதிர்கொண்டார்.

இருவரும் 2.37 மீற்றர் உயரம் பாய்ந்து சம நிலையில் இருந்தனர். ஒவ்வொருவருக்கும் மேலும்"3 முயற்சிகள் கொடுக்கப்பட்டது.ஆனால் அவர்களால் 2.37 மீற்றருக்கு மேல் உயரம் பாய முடியவில்லை. இருவருக்கும் மேலும் ஒரு முயற்சி வழங்கப்பட்டது.


ஆனால் காலில் ஏற்பட்ட உபாதை காரணமாக இத்தாலியின் தம்பேரி கடைசி முயற்சியிலிருந்து விலகினார். இதே வேளை கட்டாரின் பார்ஷிம் அதிகாரியிடம், "இறுதி முயற்சியிலிருந்து நானும் விலகினால் தங்கத்தை எங்கள் இருவருக்கும் பகிர முடியுமா?" என கேட்டுள்ளார். இதற்கு அதிகாரி ஆம், தங்கம் உங்கள் இருவருக்கும் இடையில் பகிரப்படும் என்று உறுதியளித்துக் கூறினார். பார்ஷிம் இறுதி முயற்சியிலிருந்து விலகினார்.

கடந்த 109 வருடங்களுக்குப் பின்னர் முதன்முறையாக ஒலிம்பிக் தங்கப் பதக்கம் தடகளத்தில் பகிரப்பட்டுள்ளது என்பது விசேட அம்சமாகும். அந்த வகையில், இம்முறை உயரம் தாண்டும் போட்டியில் கட்டார் நாட்டைச் சேர்ந்த முடாஸ் எஸ்ஸா பார்ஷிம் மற்றும் இத்தாலியின் கியான் மார்கோ தம்பேரி ஆகிய இருவரும் டோக்கியோ ஒலிம்பிக்கில் சம்பியன்களாகத் தெரிவாகி தங்கப்பதக்கங்களை சுவீகரித்தனர். (4)




# கோட்டை விட்டது இந்தியா

## இறுதிக்குள் நுழைந்தது பெல்ஜியம்



பெல்ஜியத்துக்கு எதிரான அரையிறுதிப் போட்டியின் முதல் கால் பகுதியில் அடுத்தடுத்த நிமிடங்களில் இந்திய வீரர்கள் கோல் அடித்து அசத்தினர்.

டோக்கியோ ஒலிம்பிக் ஆண்கள் ஹொக்கி போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா- பெல்ஜியம் அணிகள் நேற்று மோதின.

ஹர்மன்பிரீத் சிங் 7 ஆவது நிமிடத்திலும் மந்தீப் சிங் 8 ஆவது நிமிடத்திலும் தலா ஒரு கோல் அடித்தனர். இதனால் முதல் கால் பாதியில் இந்தியா 2-1 என முன்னிலை வகித்தது.

இரண்டாவது கால் பாதியில் பெல்ஜியம் அணி ஒரு கோல் அடித்தது. இதனால் 2-2 என சமனிலை வகித்தது. மூன்றாவது பாதியில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. நான்காவது கால் பாதியில் பெல்ஜியம் அணி 3 கோல்கள் அடித்தது.

இறுதியில், பெல்ஜியம் அணி 5-2 என்ற கோல் கணக்கில் இந்தியாவை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறியது. (4)

# மயங்க் அகர்வாலுக்கு காயம்

இந்திய கிரிக்கெட் அணி வீரர் மயங்க் அகர்வாலுக்கு வலைப் பயிற்சியின்போது தலையில் காயம் ஏற்பட்ட சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இங்கிலாந்து சென்றுள்ள விராட் ஹோலி தலைமையிலான இந்திய அணி, 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இன்று விளையாட உள்ளது.

அதனால் இந்திய வீரர்கள் அனைவரும் தீவிர பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், வலைப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோது இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் மயங்க் அகர்வாலின் தலைக் கவசத்தில் பந்து பலமாக அடித்தது.


இதன் காரணமாக அவரது தலையில் காயம் ஏற்பட்டதால், உடனடியாக அவருக்கு மருத்துவ ப[illegible]தனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனையில் மயங்க் அகர்வால் சில நாட்கள் ஓய்வு எடுக்க வேண்டும் என மருத்துவர்கள் பரிந்துரை செய்துள்ளனர். (4)

# 400m தடை தாண்டலில்

## உலக சாதனை

டோக்கியோ ஒலிம்பிக்கில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற ஆடவர் 400 மீற்றர் தடை தாண்டல் ஓட்டத்தில் நோர்வேயின் கார்ஸ்டன் வார்ஹோம் தங்கம் வென்றதுடன், தனது சொந்த உலக சாதனையையும் முறியடித்தார்.

இறுதிப் போட்டியில் 400 மீற்றர் தூரத்தை வார்ஹோல்ம் 45.94 விநாடிகளில் நிறைவு செய்தார். முன்னதாக அவர் குறித்த தூரத்தை 46.70 விநாடிகளில் நிறைவு செய்து உலக சாதனை புரிந்திருந்தார்.




இந்நிலையிலேயே அந்த சாதனை தற்சமயம் முறியடிக்கப்பட்டுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

(கொழும்பு)

**இரத்தினபுரி மாவட்டத்தில் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக இரத்தினபுரி மாவட்ட தொற்றுநோய் பிரிவின் விசேட வைத்தியர் லக்மால் கோணார தெரிவித்தார்.**

இரத்தினபுரி மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், "ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் இரத்தினபுரி மாவட்டத்தில் 19 சுகாதாரப் பிரிவுகளில் 344 பேர் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பெல்மடுல்ல, நிவித்திகல, கலவான, கிரிஎல்ல மற்றும் எல்பாத ஆகிய பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் எலிக்காய்ச்சல் மரணங்கள் 5 பதிவாகியுள்ளன.

கடந்த வருடமும் எலிக்காய்ச்சலால் பாதிக்கப்படுவோர் அதிகம் இனங்காணப்பட்ட மாவட்டமாக இரத்தினபுரி மாவட்டம் முன்னிலை வகித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)





**கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டமூலத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ள பல்கலைக்கழக மாணவர்களால் பத்தரமுல்ல -ஜயந்திரபுர பாராளுமன்றுக்குச் செல்லும் வீதியில் பிரவேசிக்க முயன்றதையடுத்து வீதியில் அமைதியின்மை ஏற்பட்டது.**

# கோர விபத்தில் சிக்கி குழந்தை உட்பட மூவர் பலி

(கொழும்பு)

கொட - வட்டரெக்க சந்தியில் நேற்று இடம்பெற்ற வாகன விபத்தில் 4 மாதக் குழந்தை உட்பட மூன்று பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கர வண்டி ஒன்றுடன் லொறியொன்று நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்துள்ளதாக மீகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மீகொட பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

# வனவிலங்கு தாக்குதலுக்கான இழப்பீட்டுத்தொகை அதிகரிப்பு

(கொழும்பு)

வனவிலங்குகளால் இடம்பெறும் பாதிப்புக்களுக்கு இழப்பீடு வழங்கும் நடைமுறையில் திருத்தத்தை மேற்கொள்ளவும் இடம்பெறும் உயிரிழப்புக்கான இழப்பீட்டு தொகையை 10 இலட்சம் ரூபாயாக அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இவ் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

முழுமையான அங்கவீனத்திற்கு ஆளாகும் நபரொருவருக்கு இதுவரை செலுத்தப்பட்டு வந்த 5 இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையைப் பாலின வேறுபாடோ அல்லது வயது வேறுபாடோ இன்றி 10 இலட்சம் ரூபாய் வரை அதிகரித்தல்.

அத்துடன் பகுதியளவில் அங்கவீனமுறும் அல்லது உடல் காயங்களுக்கு ஆளாகின்றவர்களுக்கு இதுவரை செலுத்தப்பட்டு வந்த 75 ஆயிரம் ரூபாய் இழப்பீட்டுத் தொகையை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வரை அதிகரித்தல்.

இன்னும் காட்டு யானைகளின் தாக்குதல்களால் இடம்பெறும் வீடுகள் மற்றும் சொத்துக்கள் சேதங்களுக்காக இதுவரை செலுத்தப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபாய் இழப்பீட்டுத்தொகையை அதிகபட்சம் 2 இரண்டு இலட் சம் ரூபாய் வரை அதிகரித்தல் போன்ற பரிந்துரைகளுக்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (நி-5)

# அரசியல் இலாபம் தேடும் எதிர்க்கட்சி

## ஜோன்ஸ்டன் குற்றச்சாட்டு

(கொழும்பு)



கொவிட்-19 வைரஸ் தாக்கத்தில் இருந்து நாட்டையும், நாட்டு மக்களையும் பாதுகாக்க பிற நாடுகளில் அரசாங்கமும், எதிர்க்கட்சியும் ஒன்றிணைந்து செயற்படுகின்றன.

இவ்வாறான தன்மை எமது நாட்டில் கிடையாது. அனைத்து விடயங்களிலும் அரசியல் இலாபம் தேடும் எதிர்க்கட்சியினரே உள்ளார்கள்.

நாட்டு மக்களுக்கு தடுப்பூசி செலுத்தும் பணிகளை எதிர்வரும் மாதத்திற்குள் வெற்றிகரமாக நிறைவு செய்வோம் என ஆளும்கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளர், நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில், கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை இல்லாதொழிக்க அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகளுக்கு அனைத்து அரசியல் கட்சிகளும் குறுகிய அரசியல் நோக்கங்களை விடுத்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

நாட்டை தொடர்ந்து மூடி வைக்க முடியாது. சுகாதார அறிவுறுத்தல்களுக்கமைய அனைத்துச் சவால்களையும் வெற்றிகொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார். (நி-5)


# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி. **கண்மணி இரத்தினம்**



கோப்பாய் பிரதேச செயலக பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தையல் போதனாசிரியையாக கடமையாற்றும் திருமதி. யோகராணி சுந்தரராஜன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. கண்மணி இரத்தினம் அவர்கள் 2021.07.12 அன்று காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், கச்சேரி, யாழ்ப்பாணம்,

(7533)

# கண்ணீர் அஞ்சலி

அமரர்.திருமதி **பார்வதி சின்னத்தம்பி**



மருதங்கேணி பிரதேச செயலக பிரிவு மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் தையல் போதனாசிரியையாக கடமையாற்றும் திருமதி. திலகவதி பரணீதரன் அவர்களின் அன்புத் தாயார் திருமதி. பார்வதி சின்னத்தம்பி அவர்கள் 2021.07.17 அன்று காலமானதால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ். மாவட்ட கிராம அபிவிருத்தி திணைக்கள உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம், கச்சேரி, யாழ்ப்பாணம்,

(7534)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனுமதியின்றி அமைக்கப்பட்ட கட்டடங்களுக்கு அனுமதி பெறுங்கள்

## சாவ.நகரசபை அறிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகர சபையின் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட கட்டடங்களுக்கான அனுமதிகளை சாவகச்சேரி நகர சபையில் பெற்றுக்கொள்ள முடியும் என சாவகச்சேரி நகர சபை தவிசாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்ச நிலைமை காரணமாக ஏற்படுத்தப்பட்ட பயணத்தடை வேளையில் சாவகச்சேரி நகர சபை எல்லைக்குள் நகரசபைக்கு தெரியாமல் பெருமளவான கட்டடங்கள் அமைக்கப்பட்டன.

அத்துடன் சனி, ஞாயிறு தினங்களிலும் கட்டடங்கள் நகர சபையின் அனுமதி இன்றி அமைக்கப்படுகின்றன. எனவே நகரசபை இவ்வாறான அனுமதியற்ற கட்டடங்களுக்கு உரிய ஆவணங்களைப் பரிசீலித்து சட்ட வரையறைக்குள் இருப்பின் அதற்கான அனுமதியை வழங்க உத்தேசித்துள்ளது.

எனவே நகர சபையின் அனுமதி இன்றி அமைக்கப்பட்ட கட்டடங்களுக்கான அனுமதிகளைப் பெற சாவகச்சேரி நகர சபையிடம் விண்ணப்பங்களை சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார். (4-5-30)

# இன்று கொவிட் தடுப்பூசிகள் வழங்கப்படும் இடங்கள்

| MOH | கிராம உத்தியோகத்தர் பிரிவு (30 வயதிற்கு மேற்பட்டோர்) | தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் |
|---|---|---|
| சங்கானை | Mopping-up | மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயம் |
| சாவகச்சேரி | ஜே/ 288, ஜே/ 299, ஜே/ 300, ஜே/ 319, ஜே/ 322, ஜே/ 336 | ஆரம்ப சுகாதார பராமரிப்பு மையம் கைதடி, தங்க நகை மண்டம், சாவகச்சேரி பிரதேச வைத்தியசாலை கொடிகாமம் |
| யாழ்ப்பாணம் | ஜே/ 62, ஜே/ 63, ஜே/ 74, ஜே/ 84 | சென்.ஜோன்ஸ் கல்லூரி நாவலர் மண்டபம் வைத்தீஸ்வரா கல்லூரி |
| காரைநகர் | ஜே/40, ஜே/ 48, கர்ப்பிணித் தாய்மார்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, காரைநகர் |
| கரவெட்டி | கிராம உத்தியோகத்தர் பிரிவு முழுவதும், முன்களப் பணியாளர்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, கரவெட்டி. |
| ஊர்காவற்றுறை | கர்ப்பிணித்தாய்மார்கள் | சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, ஊர்காவற்றுறை |
| கோப்பாய் | ஜே/260, ஜே/262, ஜே/268, ஜே/267, ஜே/271, ஜே/274, ஜே/278, ஜே/ 276, ஜே/283, ஜே/285 | பிரதேச வைத்தியசாலை, கோப்பாய் ஊரெழு கணேசா வித்தியாலயம் ஆரம்ப சுகாதார பராமரிப்பு மையம் புத்தூர் பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி |
| மருதங்கேணி | ஜே/419, ஜே/422 | அம்பன் அ.மி.த.க.பாடசாலை |
| நல்லூர் | Mopping-up<br>Mopping-up<br>படுக்கை நோயாளர்கள் | பொதுச் சுகாதார நிலையம், நாவலடி<br>சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, நல்லூர்<br>வீடுகளுக்கு விஜயம் |
| சண்டிலிப்பாய் | இளவாலை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவு<br>பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவு | ஹென்றிஸ் கல்லூரி, இளவாலை<br>பண்டத்தரிப்பு ஜசிந்தா பாடசாலை |
| தெல்லிப்பழை | ஜே/218,<br>ஜே/219,<br>ஜே/220 | யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி-காலை 8.00<br>யா/அளவெட்டி அருணோதயா கல்லூரி-காலை 10.00<br>யா/ அளவெட்டி அருணோதயாக் கல்லூரி-நண்பகல் 12.00 |
| உடுவில் | ஜே/184, ஜே/198,<br>ஜே/204,ஜே/205, ஜே/210<br>Mopping-up | யா/ உடுவில் மகளிர் கல்லூரி<br>சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, உடுவில்<br>ஏழாலை முத்தமிழ் மன்றம்<br>யா/புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் பாடசாலை<br>யா/ இணுவில் இந்து கல்லூரி |
| வேலணை | ஜே/1, ஜே/4, ஜே/1 ஜே/4 | பழைய பிரதேச செயலக அலுவலகம், நெடுந்தீவு<br>சைவப்பிரகாச வித்தியாலயம், நெடுந்தீவு |

# விசேட பூஜை வழிபாடு

(யாழ்ப்பாணம்)

உலகெங்கிலும் வாழும் மக்கள் அனைவரும் கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்தும் அனைத்து நோய் நொடிகளிலிருந்தும் மீண்டு, சுபீட்சமானதொரு வாழ்வு வாழ வேண்டி, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

அந்த வகையில் நாளை 5 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6.30 மணிக்கு சங்கானை நிகரையம்பதி சாமுண்டாதேவி சமேத அருள்மிகு ஞான வைரவர் ஆலயத்தின் விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

அதனைத் தொடர்ந்து ஆலய பிரதம குருக்கள் சிவப்பிரம்மஸ்ரீ சந்திர ஜனர்த்தன சர்மாவின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வுகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறும். (4-5)

# தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு 10 ஆம் திகதி கொடியேற்றம்

(குப்பிழான்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ச்சியாகப் பன்னிரண்டு தினங்கள் இடம்பெறவுள்ளது.

தற்போதைய கொரோனாத் தொற்றுப் பரவல் நிலைமையைக் கருத்திற் கொண்டு சுகாதாரத் துறையினரின் முழுமையான ஆலோசனையின் பிரகாரமே இவ்வாண்டு மஹோற்சவத்துக்கான ஏற்பாடுகள் இடம்பெறும் என தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்தார்.

(4-5-18)

## மாநகர சபையினரின் துரித நடவடிக்கையால்

# சரிந்து விழுந்த மரம் உடன் அகற்றப்பட்டது




(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அருகில் ஆஸ்பத்திரி வீதியில் பழைமையான பெரிய மரமொன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு சரிந்து விழுந்தது.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு உடனடியாகச் சென்ற யாழ்.மாநகர முதல்வர் வி. மணிவண்ணனும் யாழ்.மாநகர ஆணையாளர் த.ஜெயசீலனும் நேரடியாக சென்று பார்வையிட்டதுடன் மரத்தை அகற்றுவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டனர். (4-5-18)

# வாளுடன் இளைஞன் கைது



(யாழ்ப்பாணம்)

புல்லு வெட்டுவதற்காக பயன்படுத்தப்படும் புல்லு வெட்டியினை வாளாக உருமாற்றம் செய்து அதனை மறைத்து எடுத்து சென்ற இளைஞர் ஒருவர் காங்கேசன்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புல்லு வெட்டியின் கைபிடியினை மாற்றம் செய்து, புல்லு வெட்டியின் இரு பக்கங்களையும் கூர்மையாக்கி அதனை வாளாக உரு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

குறித்த இளைஞனிடம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-5-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்ற விவகாரம்; நிபுணர் குழுவிற்கு நிதி ஒதுக்கீடு

## ஐ.நா. பொதுச்சபை அனுமதி

(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சாட்சியங்களை சேகரிப்பது மற்றும் தரவுகளைப் பாதுகாக்கும் செயற்பாடுகளுக்குரிய நிபுணர் குழு உருவாக்கத்திற்கு தேவையான நிதி ஒதுக்கீட்டுக்கு ஐ.நா. பொதுச்சபை அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இந்த நிபுணர் குழு உருவாக்க நகர்வை தடுக்க அரசாங்கம் பல முயற்சிகளை எடுத்த போதிலும் இலங்கை- சீன உறவுகள் மீதான மேற்குலக நாடுகளின் வியூகத்தால் கொழும்பு அதிகார மையம் கடும் இராஜதந்திர தோல்வியைச் சந்தித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமை பேரவையின் 48 ஆம் கூட்டத் தொடர் அடுத்த மாதம் ஆரம்பமாக உள்ள நிலையில் நிபுணர்கள் குழுவின் உருவாக்கத்துக்கு தேவையான 2.8 மில்லியன் அமெரிக்க டொலர் நிதிக்கு ஐ.நா. பொதுச்சபை பாதீட்டு நிர்வாக குழு பச்சைக்கொடி காட்டியுள்ளது.

கடந்த மார்ச்சில் ஜெனிவாவில் கொண்டுவரப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானத்தின் அடிப்படையில் 13 உறுப்பினர்கள் அடங்கிய தனியான செயலணி ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இந்த செயலணிக்கு அனைத்துலக குற்றவியல் சட்டத்தில் அனுபவம் கொண்ட ஒருவர் தலைவராக நியமிக்கப்படுவார் என்பதுடன், அவருக்கு உதவியாக மேலும் இரண்டு சட்டவல்லுநர்கள் பணியாற்றுவார்கள்.

இந்தக்குழுவின் வழிநடத்தலில் இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சாட்சியங்களை சேகரிப்பது மற்றும் பாதுகாத்தல் தொடர்பான நகர்வுகளை ஒருங்கிணைக்கவும் திட்டமிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(நி-5)

## குறிப்பிட்ட சில நாடுகள் ஏற்காத தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டோர் மீண்டும் தடுப்பூசிகள் பெற்றுக்கொள்ளும் நிலை



(கொழும்பு)

சீனாவின் தயாரிப்பான சினோபார்ம் தடுப்பூசியைப் பெற்றுக் கொண்டு வெளிநாடு செல்ல காத்திருப்போர், மீண்டும் வெளிநாடு சென்று மேலும் இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது என அமைச்சரும் அமைச்சரவை இணைப் பேச்சாளருமான ரமேஸ் பத்திரண தெரிவித்தார்.

ஏற்கனவே, இரண்டு தடுப்பூசிகளைப் பெற்றுக்கொண்டு, வெளிநாடு சென்று மேலும் இரண்டு தடுப்பூசிகளைப் பெறுவதில் சிரமம் இருப்பதாக வெளிநாடு செல்லக் காத்திருப்போர் கருதுகின்றனர்.

இதுகுறித்து. நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போது எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே இந்த விடயத்தினை தெரிவித்தார்.

தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

சுமார் 25 நாடுகள் ஒரு சில தடுப்பூசிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கியுள்ளன. எனவே, அந்தந்த நாடுகள் அங்கீகரிக்கும் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொடுப்பது குறித்து வேலைத் திட்டமொன்றை ஆரம்பிக்கவுள்ளோம்.

ஆனால், வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பில் இருந்து சினோபார்ம் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்கள் குறித்தே சிக்கல் எழுந்துள்ளது.

ஆனால், தடுப்பூசி பெறாது வெளிநாடு செல்லும் எதிர்பார்ப்பில் உள்ளவர்கள், செல்லும் நாட்டில் எந்த தடுப்பூசி அங்கீகரிக்கப்பட்டுள்ளதோ அதே தடுப்பூசியை வழங்குவதற்கு எதிர்பார்த்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-5)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து நட்சத்திரம்: பரணி
கி.பா: -செவ் 8 சூரி4 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: ஜேர்மனி PR உண்டு
எதிர்பார்ப்பு:உள்நாடு,வெளிநாடு
தொ.இ: **B/2278**

பிறப்பு:1981 இந்து நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 32 செவ்.சூரி6 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:**Project Officer**
எதிர்பார்ப்பு:அரசஉத்தியோகம் (தீவுப்பகுதி வேண்டாம்)
தொ.இ: **B/2281**

பிறப்பு:1978 இந்து நட்சத்திரம்:உத்தரம்
கி.பா:**50 ¼** செவ் 8 சூரி7 இல்
உயரம்:5'7"
தகைமை/தொழில்: பிரான்ஸ் PR இல்லை
எதிர்பார்ப்பு:வெளிநாடு மட்டும்
தொ.இ: **B/2360**

பிறப்பு:1967 இந்து நட்சத்திரம்: சித்திரை
கி.பா: **18 ½** செவ் 5சூரி3இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:எஞ்சினியர் அவுஸ்திரேலியா
எதிர்பார்ப்பு:**A/L**படித்தபெண்
தொ.இ: **B/2391**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 அந்து நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 12 செவ் 11சூரி4 இல்
உயரம்:5'5"
தகைமை/தொழில்:. **B.Sc** எக்கவுண்டன்
எதிர்பார்ப்பு:பட்டதாரி நிரந்தரதொழில்
தொ.இ:**G/6362**

பிறப்பு:1974 இந்து நட்சத்திரம்:மிருகசீரிடம்
கி.பா: -செவ் 8 சூரி 7இல்
உயரம்:5'2"
தகைமை/தொழில்:தையல்
எதிர்பார்ப்பு:சொந்தக்கடை,வியாபாரம்
தொ.இ:**G/6368**

பிறப்பு:1984 இந்து நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா:**32 ¼** செவ்1 சூரி11 இல்
உயரம்:**155cm**
தகைமை/தொழில்: **B.Sc**, அபிவிருத்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: உள்நாடு அரச உத்தியோகம், வெளிநாடு லண்டன்
தொ.இ:**G/6373**

பிறப்பு: 1988 இந்து நட்சத்திரம்:பூசம்
கி.பா:10 செவ் 3 சூரி5 இல்
உயரம்:4'9"
தகைமை/தொழில் **BBA** பட்டதாரி வங்கியாளர்
எதிர்பார்ப்பு:அரசாங்க உத்தியோகம் விரும்பத்தக்கது.
தொ.இ:**G/6513**

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு
சேவைக் கட்டணமாக ரூபா 500 அற[illegible]டப்படும்.


## சிலரின் செயற்பாடுகளே தொற்று அதிகரிக்க காரணம்!

### மருத்துவ ஆய்வுகூட தொழில் நிபுணர்கள் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தை சேர்ந்த சில தரப்பினரின் செயற்பாடுகளே கொவிட் நோய்த்தொற்று அதிகரிக்க காரணமாக அமைந்துள்ளதாக மருத்துவ ஆய்வுகூட தொழில் நிபுணர்களின் சங்கத்தின் தலைவர் ரவி குமுதேஸ் தெரிவித்தார்.

40 முதல் 50 வரை இருந்து வந்த கொவிட் மரணங்களில் எண்ணிக்கை தற்போது 67 ஆக அதிகரித்துள்ளது. வைத்தியசாலைகளில் சரியாக சிகிச்சை இன்றி இறப்போரின் எண்ணிக்கையை கவனத்தில் எடுத்துக்கொண்டால், இந்த எண்ணிக்கை இரண்டு, மூன்று மடங்காக அதிகரிக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

மரணமடைவதை தடுக்கக் கூடிய நோயாளிகள் அதிகளவில் இறந்துள்ளனர். இவர்கள் அனைவரும் தாமாகவே வைத்தியசாலைக்கு வந்து சிகிச்சை பெற்றுக் கொண்டவர்கள்.

கண்டறியப்படும் கொவிட் தொற்றாளர்களை விட 5 மடங்கான நோயாளர்கள் சமூகத்தில் இருக்கக் கூடும். கட்டில்களுக்கு மேலதிகமாக அனைத்து வைத்திய விடுதிகளிலும் நோயாளிகள் இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார். (நி-5)




**கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபை பிரமாணத்தில் இணைப்புக்கள், திருத்தங்களுக்கு அங்கத்தவர்களிடமிருந்து பிரேரணைகள் கோரல்**

மேற்குறிப்பிட்ட ஆலயத்தின் பரிபாலனசபை பிரமாணங்களில் திருத்தங்கள்; இணைப்புக்கள் செய்வதற்கு அநேக அங்கத்தவர்களின் ஆலோசனைக்கு இணங்க நிர்வாக சபை தீர்மானித்துள்ளது.

இதற்கான திருத்தங்கள் இணைப்புக்கள் இருப்பின் அப்பிரேரணையை 20.08.2021 இற்கு முன் எழுத்துமூலம் பதிவுத் தபாலில் **தலைவர், கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோயில், கொக்குவில்** எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பிரேரணைகளை பரிபாலன சபை ஆராய்ந்து பொதுச் சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதனை அறியத் தருகின்றோம்.

| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
|---|---|---|
| [illegible] (J.P) | அ.அருள்நேசன் (F.SI) | செ.செல்வறஞ்ஜன் (O.ST.J) |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியாவில் கொவிட் தீவிரம் சிறைக் கைதிகள் உட்பட 41 பேருக்கு தொற்று

(குருமன்காடு)

**வவுனியாவில் 10 சிறைச்சாலை கைதிகள் உட்பட 41 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியாவில் இனங்காணப்பட்ட கொவிட் தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டோர் மற்றும் எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் முடிவுகள் சில நேற்று முன்தினம் இரவு வெளியாகின.

குறித்த முடிவுகளின் அடிப்படையிலேயே வவுனியாவில் 41 பேருக்கு கொவிட் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதில் 10 பேர் வவுனியா சிறைச்சாலை கைதிகளாக உள்ளனர். அத்துடன் தமக்கான நோய் அறிகுறிகள் தென்பட்ட நிலையில் தாமாக முன்வந்து பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டவர்களில் 10 பேருக்கு தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொவிட் சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைப்பதற்கும் அவர்களுடன் தொடர்புடையவர்களை தனிமைப்படுத்தவும் சுகாதாரத் துறையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர். (4-5-250)

# இரண்டாவது டோஸ் செலுத்தும் பணி எதிர்வரும் 9ம் திகதி ஆரம்பம்

## வடக்கு சுகாதார பணிப்பாளர் தெரிவிப்பு



(குப்பிழான்)

கொவிட்-19 தடுப்பூசி வழங்கல் திட்டத்தில் கடந்த ஜூலை மாத ஆரம்பத்தில் முதலாவது கொவிட் தடுப்பூசி வழங்கப்பட்டவர்களிற்கான இரண்டாவது தடுப்பூசி எதிர்வரும் 09 ஆம், 10 ஆம், 11 ஆம் திகதிகளில் வழங்கப்படும் என வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

நேற்றுச் செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இத் தடுப்பூசிகள் வழங்கப்படும் நிலையங்கள் தொடர்பாக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மூலம் மக்களிற்கு அறிவிக்கப்படும்.

பொதுமக்கள் இரண்டாவது தடுப்பூசியினை பெற்றுக் கொள்வதற்கு செல்லும்போது முதல் தடவை தடுப்பூசி பெற்றுக் கொண்டமையினை உறுதிப்படுத்துவதற்காக சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் வழங்கப்பட்ட அட்டையினை எடுத்துச்செல்ல வேண்டும்.

ஒவ்வாமை உடையவர்களுக்கும், மற்றும் வேறு ஆபத்துக்குரிய நோய் நிலைமை உடையவர்களுக்கும், அவசர சிகிச்சைப் பிரிவுகள் உள்ள யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை மற்றும் சாவகச்சேரி, தெல்லிப்பழை, ஊர்காவற்றுறை, பருத்தித்துறை ஆகிய ஆதார வைத்தியசாலைகளில் முதல் தடவை வழங்கப்பட்டதனைப் போன்றே ஓகஸ்ட் மாதம்-14 ஆம் திகதி சனிக்கிழமை இரண்டாவது தடுப்பூசிகளினைப் பெறுக்கொள்வதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கு வழங்குவதற்காகப் பிரத்தியேகமாகத் தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (4-5-18-33)

# வேடதாரி சஞ்சிகை வெளியீடு



(யாழ்ப்பாணம்)

புத்தாக்க அரங்க இயக்கத்தின் வெளியீடாக எஸ்.ரி.குமரன், எஸ்.ரி.அருள்குமரன் ஆகியோரை பிரதம ஆசிரியர்களாகக் கொண்டு வேடதாரி அரங்கிற்கான சஞ்சிகை வெளிவந்துள்ளது.

சஞ்சிகை வெளியீட்டின் முதற்பிரதியை திருமறைக்கலா மன்றத்தின் பிரதி இயக்குநர் யாழ்ப்பாணம் கல்வி வலய நாடகமும் அரங்கியலும் ஆசிரிய ஆலோசகர் ஜோன்சன் ராஜ்குமார் பெற்றுக்கொண்டார்.

திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபகர் கலாநிதி கலைமாமேதை அருட்திரு மரியசேவியர் அடிகளாரின் சிறப்பு இதழாக குறித்த சஞ்சிகை வெளிவந்துள்ளது. (4-5-33)

# கிளிநொச்சி மாவட்டத்திற்கு மேலும் 15 ஆயிரம் தடுப்பூசிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதற்கு தேவையாக உள்ள எஞ்சிய 15 ஆயிரம் தடுப்பூசிகளையும் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். கிளிநொச்சி மாவட்டத்தில் வாழும் 30 வயதுக்கு மேற்பட்ட மக்களின் தேவைக்கான மேலும் 15 ஆயிரம் தடுப்பூசிகள் தேவையாக உள்ளதாக சுகாதாரத்தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

இந்நிலையில் அது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில் குறித்த 15 ஆயிரம் தடுப்பூசிகளையும் விரைவில் பெற்றுத்தர நடவடிக்கை எடுப்பதாக அவர் உறுதியளித்துள்ளார். (4-5-100)



மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 19 இலட்சம் ரூபாய் பெறுமதியான நோய் நிலை கண்காணிப்பு திரை மற்றும் கிருமி நீக்கும் இயந்திரங்கள் மற்றும் ஒட்சிசன் செறிவூட்டிகள் அமெரிக்க யூத உலக சேவை நிறுவனத்தின் நிதி அனுசரணையில் மன்னார் மாவட்ட சமூக பொருளாதார மேம்பாட்டிற்கான நிறுவனத்தினால் கையளிக்கப்பட்டது.

(படம்:- ஜோசப் நயன்)

# 54 ஆயிரத்திற்கும் அதிகமானோர் வவுனியாவில் தடுப்பூசி பெற்றுக்கொண்டனர்

## சுகாதாரப் பிரிவு தகவல்

(நெளுக்குளம்)

வவுனியாவில் கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை சுகாதாரப் பிரிவினர் மற்றும் இராணுவத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இதில் அதிகளவான பொது மக்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டு தடுப்பூசியினை செலுத்திக் கொண்டனர்.

வவுனியாவில் தடுப்பூசி போட ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து நேற்று முன்தினம் வரை வவுனியாவில் 54,000 தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (4-8)

# வீதி ஓரங்களில் வீசப்படும் உணவகக் கழிவுகள்

## பொதுமக்கள் குற்றச்சாட்டு



(தருமபுரம்)

கிளிநொச்சி புளியம்பொக்கணை பகுதியில் பிரதான வீதி இரு மருங்கிலும் உணவகக் கழிவுகள் இரவு வேளைகளில் கொட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர். இதன் காரணமாக துர்நாற்றம் வீசுவதாகவும் வீதி ஓரங்களில் கால்நடைகள் அவ் உணவுக் கழிவுகளை உண்ணுவதன் காரணமாக அப்பகுதியினூடாக போக்குவரத்து பாதிப்படைவதாகவும் தெரிவித்தனர். இது தொடர்பாக சுகாதார பிரிவினர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-5-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராசிபலன்

04.08.2021
ஆடி 19, புதன்கிழமை
ஏகாதசி பிற்பகல் 3.50 மணிவரை
மிருகசீரிடம் பின்னிரவு 5.33 மணிவரை
சுபநேரம் -4.34-6.04 மணிவரை
இராகுகாலம் 12.04-1.34 மணிவரை
சந்திராஷ்டமம்- அனுசம், ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்

எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்கள் சந்திப் புண்டு.


ரிஷபம்

எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்று செய்து முடிப்பீர்கள், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், நண்பர்கள் நம்பிக்கைக் குரியவர்களாக இருப்பர்.


மிதுனம்

தொழில் ரீதியாக யாராவது உதவி கேட்டு வரலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், விரயங்கள் ஏற்படாதிருக்கு விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது.


கடகம்

வருமானம் பெருகி வளம் காணும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், அரசு வழியில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.


சிம்மம்

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், உற்ற நண்பர்கள் உறுதுணையாக இருப்பர், வெளிநாட்டுத் தொடர்புகள் அனுகூலம் தரும், போசன சுகமுண்டு.


கன்னி

வர வேண்டிய பண வரவுகள் இன்று எளிதில் கிடைக்கலாம், தேடிச் சென்றவர்கள் நாடி வந்து உதவுவர், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப் புண்டு.


துலாம்

பொது வாழ்வில் வீண்பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வரவும் செலவும் சமமாகும் நாள்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், களஸ்திர நன்மையுண்டு.


தனுசு

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள்.


மகரம்

செய்தொழிலில் மேன்மையும், உயர்வும் கிடைக்கும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.


கும்பம்

தொழில் முயற்சியில் எதிர்பார்த்த நற்பயன் கிடைக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், பெற்றோர் மீதான பாசம் கூடும்.


மீனம்

வெற்றி தரும் செய்திகள் வந்து சேரலாம், திடீர் விரயங்கள் ஏற்படலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர்.

புகழ்ச்சி நல்லவனை மேலும் நல்லவனாக்கும், கெட்டவனை மேலும் கெட்டவனாக்கும்.

# யாழ். போதனாவில் ஒட்சிசன் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒட்சிசன் தட்டுப்பாடு காணப்படுவதாக வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்தியர் சண்முகநாதன் சிறிபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.**

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையில் நாளொன்றுக்கு 120 வரையான ஒட்சிசன் சிலிண்டர்கள் இதுவரை பாவிக்கப்பட்டு வந்தது. எனினும் தற்போது கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் காரணமாக சிலிண்டர் பாவனை 180 இற்கு மேல் அதிகரித்துள்ளது.

ஒவ்வொரு நாளும் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் இருந்து மூன்று தடவைக்கு மேல் வாகனங்கள் அநுராதபுரம் சென்று சிலிண்டர்கள் பெற்று வருகின்றன.

யாழ். குடாநாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துள்ளதன் காரணமாக வைத்தியசாலை விடுதிகளில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கோப்பாய் கொரோனா சிகிச்சை நிலையத்திலும் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் தங்க வைக்கப்பட்டுள்ளார்கள். எனவே தற்போதுள்ள நிலையில் மருத்துவ வளங்கள் அனைத்தும் கொரோனாத் தொற்றுக்குள்ளானோருக்கு பாவிக்கப்படுகின்றது.

தற்போதைய சூழ்நிலையில் தடுப்பூசி போடாதவர்கள் தான் அதிகமாக இறப்பினை சந்திக்கின்றார்கள். எனவே பொதுமக்கள் அனைவரும் இந்தத் தடுப்பூசியைப் போடுவதன் மூலம் உயிரிழப்புகளில் இருந்து காப்பாற்றிக் கொள்ள முடியும்.

அத்தோடுவரும் காலங்களில் வைத்தியசாலைக்கு வருவோர் தமக்குரிய தடுப்பூசி அட்டையினை கொண்டு வருதல் மிக அவசியமான ஒன்றாகும் எனவும் தெரிவித்தார். (4-5-33)

# விபத்து; இளைஞர் படுகாயம்


(கரணவாய்)

பருத்தித்துறை மந்திகை பகுதியில் மோட்டார் சைக்கிளும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞர் படுகாயம் அடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



குறித்த விபத்து நேற்று செவ்வாய்க்கிழமை மதியம் மந்திகைச் சந்தியில் இடம் பெற்றது.

விபத்தில் கரணவாய் வடக்கு நவிண்டிலைச் சேர்ந்த 34 வயதுடைய ஒருவரே படுகாயங்களுக்கு உள்ளானார். இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (4-5-60)



யாழ். மாவட்டத்திற்கு இராணுவக் கட்டளைத்தளபதியாக கடமையேற்றுள்ள மேஜர் ஜெனரல் கொடித்துவக்கு தனது பணியினை பொறுபேற்ற நிலையில் யாழ். மறை மாவட்ட ஆயர் யஸ்டின் பேனாட் ஞானப்பிரகாசத்தை ஆயர் இல்லத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சந்தித்து கலந்துரையாடினர்.

(படம்- சிவசாந்தன்)

# நல்லூர் ஆலய மஹோற்சவத்தில் சுகாதார நடைமுறையை பின்பற்றுங்கள்

## யாழ். மாநகர முதல்வர்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் 13 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இவ்வேளையில் நாடெங்கும் ஏற்பட்டுள்ள கொரோனா தொற்றின் தீவிர பரவல் நிலையைக் கருத்தில் கொண்டு தற்போது நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள சுகாதார சட்ட நடைமுறைகள் ,விதிகள், அறிவுறுத்தல்கள், வழிகாட்டல்களை முழுமையாகவும், இறுக்கமாகவும் பின்பற்றி அமைதியாக ஆடம்பரமின்றி பக்திபூர்வமாக இப் பெருந்திருவிழா நடைபெற அனைவரும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என யாழ்.மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் தெரிவித்தார். (நி-4-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# மீண்டும் கொரோனாவின் கைப்பிடியில் சிக்கித் தவிக்கும் இந்தியா

(டில்லி)
**இந்தியாவில் கொரோனா 2 ஆவது அலை தொற்று பரவல் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்திருந்த நிலையில் அண்மைக்காலமாக அந்நிலை தணிந்திருந்த போதிலும் மீண்டும் தொற்று எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**




இந்தியாவில் கொரோனா 2 ஆவது அலை கடந்த மே மாத தொடக்கத்தில் உச்சம் அடைந்தது. அதன்பிறகு தொடர்ந்து 11 வாரங்களாக பாதிப்பு குறைந்து வந்த நிலையில், கடந்த வார பாதிப்பு 7.5 சதவீதம் உயர்ந்துள்ளது.

கடந்த ஒரு வாரத்தில் 2.86 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருப்பது புள்ளி விபரங்கள் கூறுகின்றன. அதற்கு முந்தைய வாரத்தில் 2.66 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். இதன் மூலம் ஒரு வாரத்தில் பாதிப்பு 7.5 சதவீதம் உயர்ந்திருப்பது தெரிய வந்துள்ளது.

இதற்கிடையே நேற்றுக் காலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணி நேரத்தில் இந்தியாவில் 40 ஆயிரத்து 134 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இந்திய மத்திய சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இதனால் மொத்த பாதிப்பு 3 கோடியே 16 இலட்சத்து 95 ஆயிரத்து 958 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-5)

**உலகளவில் கொரோனா**
**உயிரிழப்பு :-4 256 830**
**தொற்று :-199 953 470**
(நேற்றைய மாலை நிலைவரம்)

# இந்தியா முழுவதும் 24 போலி பல்கலைக்கழகங்கள் அடையாளம்

(டில்லி)
இந்தியா முழுவதும் 24 போலி பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வருவது கண்டறியப்பட்டுள்ளதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

இதில் உத்தரப்பிரதேசத்தில் மட்டும் 8 பல்கலைக்கழகங்கள் செயற்பட்டு வந்துள்ளதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பா.ஜ.க. உறுப்பினரான தர்மேந்திரன் எழுத்துமூலம் மக்களவையில் பதிலளித்துள்ளார். யு.ஜி.யின் அனுமதி பெறாமல் இயங்கி வரும் மேலும் இரண்டு பல்கலைக்கழகங்கள் தொடர்பான வழக்கு நீதிமன்றத்தில் உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



உத்தரப்பிரதேசத்தில் அதிகபட்சமாக எட்டு, டில்லியில் ஏழு, ஒடிசா மற்றும் மேற்கு வங்காளத்தில் தலா இரண்டு பல்கலைக்கழகங்கள் போலியாக செயற்பட்டு வந்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த பல்கலைக்கழகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்க மாநில அரசுகள் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (8-5)

# இந்திய எல்லையில் தீவிரவாதிகள் தாக்குதல் பாதுகாப்புப் படையினர் இருவர் பலி

(டில்லி)
இந்தியாவின் வட கிழக்கு மாநிலமான திரிபுராவின் தலாய் மாவட்டத்தில் எல்லைப் பாதுகாப்புப் படையினருக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில் இரு வீரர்கள் உயிரிழந்தனர்.

திரிபுராவின் தலாய் மாவட்டத்தில் தீவிரவாதிகள் இருப்பதாக வந்த தகவலையடுத்து எல்லைப் பாதுகாப்புப் படையினர் ரோந்துப்பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த தீவிரவாதிகள் துப்பாக்கிச்சூடு நடத்தினர்.

பின்னர் இரு தரப்புக்கும் இடையே நடைபெற்ற மோதலில் துணை ஆய்வாளர் உட்பட இரண்டு எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்கள் கொல்லப்பட்டனர். மேலும் இருவர் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் இந்த துப்பாக்கிச் சூடு நடைபெற்றதாக அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும் சண்டையில் ஈடுபட்ட தீவிரவாதிகள் சிலருக்கும் காயம் ஏற்பட்டிருக்கும் என்று கூறினர். தொடர்ந்து தீவிரவாதிகளை பிடிக்க அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளதாக எல்லைப் பாதுகாப்புப் படை தெரிவித்துள்ளது. (8-5)



# கொரோன... இன்னும் தீவிர...

## நடிக...

(சென்னை)
கொரோனா காலத்தில் அரசு ... தீவிரமாக செயற்பட வேண்டும் என ம... மய்யம் தலைவர் கமலஹாசன் நேற்றை... தெரிவித்தார்.

கோவையில் கமலஹாசன் செய்தியா... நேற்று சந்தித்தார். அப்போது அவர் கூறி...

நேர்மையாக எங்களுக்கு வா... மக்களுக்கு நன்றி. அவர்களுக்கும்... யகத்திற்கும் வணக்கம் தெரிவிக்க வந்துள்ளேன்.

மக்களின் நலன் பார்த்தே ஆ... செயற்பட்டு வரும் நிலையில் அழுத்த... கொடுக்கவில்லை.

கொரோனா நடவடிக்கையில் ஆ...

# ராகுல் ... பாராளுமன்...

(டில்லி)
பெகாஸஸ் சர்ச்சை தொடர்ந்து நீடித்து வருகின்ற நிலையில், இந்திய காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பாராளுமன்றம் நோக்கி... ணியாக...

பெ... குறித்து... களை ... என எ... றுத்தி...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# வுஹான் ஆய்வகத்திலிருந்துதான் கொரோனா வெளியானது

## அழுத்திக் கூறும் அமெரிக்கா

**(பீஜிங்)**
**சீனாவின் வுஹான் நகரத்தித்தில் உள்ள ஆய்வகத்திலிருந்துதான் கொரோனா வைரஸ் கசிந்ததாக அமெரிக்கக் குடியரசுக் கட்சி எம்.பிக்களினால் நேற்று முன்தினம் வெளியிட்ட ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**



இந்தக் குற்றச்சாட்டு ஏற்கனவே எழுந்த நிலையில் அதை சீனா மறுத்து வந்தது.

இதையடுத்து கொரோனா வைரஸின் தோற்றம் குறித்து ஆய்வு நடத்தி 3 மாதங்களுக்குள் அறிக்கை தாக்கல் செய்ய அமெரிக்க ஜனாதிபதி பிடன் அந்நாட்டு புலனாய்வு அமைப்புகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், குடியரசுக் கட்சி எம்.பி.மைக் மெக்கால் தலைமையிலான அக்கட்சி எம்.பிக்கள் ஓர் ஆய்வறிக்கையை நேற்று முன்தினம் வெளியிட்டனர். அதில், வுஹான் ஆய்வகத்திலிருந்து கொரோனா வைரஸ் கசிந்ததற்கான ஏராளமான சான்றுகள் உள்ளன. 2019, செப்டெம்பர் 12 ஆம் திகதிக்கு முன்னரே இது நிகழ்ந்திருக்க வேண்டும்.

இது குறித்துத் பாராளுமன்றத்தில் விவாதிக்க வேண்டும் என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8-5)

# ...னா காலத்தில் அரசு ...விரமாக செயற்பட வேண்டும்

## ...நடிகர் கமலஹாசன்

...அரசு இன்னும்
... என மக்கள் நீதி
... நேற்றைய தினம்
...
...செய்தியாளர்களை
...வர் கூறியதாவது.
...து வாக்களித்த
...ளுக்கும் ஜனநா
...ரிவிக்க கோவை
...
...தே ஆளுங்கட்சி
...அழுத்தம் எதுவும்
...
...யில் ஆளுங்கட்சி



முடிந்ததை செய்கிறது. இன்னும் அதிகமாக, தீவிரமாக செயற்பட வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (8-5)

# சீனாவில் ஏற்பட்ட வெள்ளத்தால் உயிரிழந்தோர் தொகை உயர்வு

(பீஜிங்)

மத்திய சீனாவில் கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கால் ஏற்பட்ட உயிரிழப்புகளின் எண்ணிக்கை 302 ஆக அதிகரித்துள்ளது.

இந்த அறிவிப்பானது கடந்த வாரம் அறிவிக்கப்பட்ட இறப்புகளின் எண்ணிக்கையை மூன்று மடங்காக அதிகரித்துள்ளதுடன், கூடுதலான மக்கள் காணாமல் போயுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.





12 மில்லியன் மக்கள் வசிக்கும் ஜெங்ஜோ, ஒரு வருடத்திற்கான மழையினை வெறும் மூன்றே நாட்களில் பதிவு செய்தது. ஜுலை 17 முதல் மூன்று நாட்களில் சுமார் 617.1 மில்லி மீற்றர் (24.3 அங்குலம்) மழை ஜெங்ஜோவில் பதிவானது.

இது நகரின் ஆண்டு மழை வீழ்ச்சி சராசரி 640.8 மி.மீ. (25.2 அங்குலம்) இற்கு சமம்.

இதனால் குடியிருப்பு பகுதிகளும் வாகனங்களும் வீதிகளும் மற்றும் சுரங்க ரயில் பாதைகளும் வெள்ளத்தில் மூழ்கின. (8-5)

# ...ல் காந்தி தலைமையில் ...ன்றத்திற்கு சைக்கிள் பேரணி



நோக்கி சைக்கிள்களில் பேரணியாகச் சென்றனர்.

பெகாஸஸ் விவகாரம் குறித்து சபையில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சிகள் வலியுறுத்தி வருகின்றன. இதன் காரணமாக எதிர்க்கட்சிகளின் அமளியால் அவை நடவடிக்கைகளும் அவ்வவ்போது ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.


இதனால் 107 மணி நேரம் நடந்திருக்க வேண்டிய பாராளுமன்ற அமர்வுகள் 18 மணி நேரம் மாத்திரமே நடந்துள்ளது.

இதற்கிடையில் எதிர்க்கட்சிகள் பாராளுமன்றம் [illegible] [illegible] ளமை குறிப்பிடத்தக்கது.(8-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது என்பது முற்றிலும் தவறானது

## பாதுகாப்பு செயலாளர் கமால் குணரத்ன



(கொழும்பு)

உயர்தரப் பரீட்சையில் தகுதி பெற்றவர்களுக்கு மனித மூல தனம், கிடைக்கும் வளங்கள் மற்றும் பரந்த அறிவின் அதிக பட்ச பயன்பாட்டிற்கான வாய்ப்பே கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்டுள்ளது என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழக சட்டம் தொடர்பான உண்மைகளை ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் வகையில் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிற்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இதை குறிப்பிட்டார். தேசிய பல்கலைக்கழகங்களுக்கான மாணவர் அனுமதி எண்ணிக்கை 41,000 ஆக உயர்த்தப்பட்டுள்ள போதிலும் உயர்தரத்தில் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் அதிக எண்ணிக்கையானவர்கள் உயர் கல்வி வாய்ப்பினை இழக்கின்றனர்.

செல்வந்த பெற்றோரின் பிள்ளைகள் வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களில் உயர் கல்விக்காக வழிநடத்தப்படும் போது, நம் நாட்டிற்குச் சொந்தமான பெரும் தொகை நிதி வெளிநாடுகளுக்கு செல்வதனை மேற்கோள் காட்டிய ஜெனரல் கமால் குணரத்ன,

வேறு சில பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்த உள்ளூர் பல்கலைக்கழகங்களில் சேர்க்கின்றனர் "இருப்பினும், நம் நாட்டில் உள்ள ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள் வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும் வசதி இல்லாததால், அவர்களின் உயர் கல்வியின் கனவுகளை நிறைவேற்றுவதற்கான வழிகளை இழக்கின்றனர்".

அவ்வாறான மாணவ தலைமுறையின் தகுதியான பிரிவினர் தங்கள் வாழ்க்கையை வெற்றிகரமாக ஆக்குவதற்கான வாய்ப்பை உருவாக்குவது தவறா? என்று கேள்வி எழுப்பினார்.

கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கு விளக்கமளித்த பாதுகாப்புச் செயலாளர், கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தில் கல்வி இராணுவமயமாக்கப்பட்டுள்ளது என நம் சமூகத்தில் பரப்பப்பட்டுள்ள விடயம் முற்றிலும் தவறானது என்றும் தெரிவித்தார். (நி-5)

# தடுப்பூசி பெற்ற 49 பேர் கொவிட் தொற்றால் மரணம்

(கொழும்பு)

இலங்கையில் தடுப்பூசி பெற்றுக் கொண்ட 49 பேர் கொவிட் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தடுப்பூசி இரண்டையும் பெற்றுக் கொண்ட 9 பேரும் ஒரு தடுப்பூசி பெற்றுக் கொண்ட 40 பேரும் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக சுகாதார அமைச்சின் கொவிட் தொடர்பான தலைமை ஒருங்கிணைப்பாளர் வைத்தியர் அன்வர் தெரிவித்துள்ளார்.

தடுப்பூசி இரண்டையும் பெற்றுக் கொண்ட 9 பேருக்கும் உடலில் வேறு பாதிப்புகள் இருந்தமையே மரணத்திற்குக் காரணமாகியுள்ளதென பிரேத பரிசோதனையில் உறுதியாகியுள்ளது. (நி-5)

# அமைச்சர் பதவியால் சரத் வீரசேகர ஏமாற்றம்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

சரத் வீரசேகர பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியால் மிகவும் ஏமாற்றமடைந்துள்ளதாக கொழும்பு சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அவர் தனக்கு வேறு அமைச்சுப் பொறுப்பை வழங்குமாறு ஜனாதிபதியிடம் கோர பல முயற்சிகள் மேற்கொண்ட போதிலும், அவருக்கு அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை என்று அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சரத் வீரசேகரவிடம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் பதவியை ஒப்படைத்தபோது, அதில் ஐந்து நிறுவனங்கள் இருந்தன, தற்போது அவற்றில் மூன்று நிறுவனங்கள் அவரிடம் இருந்து நீக்கப்பட்டுள்ளன.

அவரின் கீழ் இருந்த முக்கிய நிறுவனம் ஒன்று சில மாதங்களுக்கு முன்பு ஜனாதிபதியால் திலும் அமுனுகமவிடம் ஒப்படைக்கப்பட்டது.


மேலும் இரண்டு நிறுவனங்கள் சில நாட்களுக்கு முன்பு ஜனாதிபதியால் அவரது பாதுகாப்பு அமைச்சின் கீழ் கையகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2371

Search for people, places and things

### கணேஷ்

கணவன்: இன்னுமா சமையல் ஆகலே? நான் ஹோட்டலுக்குப் போறேன்...
மனைவி: ஒரு அஞ்சு நிமிடம் பொறுங்க ...
கணவன்: அதுக்குள்ளே ஆகிடுமா...?
மனைவி- இல்லை, நானும் புடைவையை மாத்திட்டு உங்களோட வந்துடுறேன்...



### லதுசியா

கூச்சலுக்கு மத்தியில் மௌனமும் ஆயுதமாகும்...



### யதுசன்

கோயிலுக்குள்ளே போடும் 100 ரூபாய் உன்னை மனிதனாக்கும் கோயிலுக்கு வெளியே போடப்படும் ஒரு ரூபாய் உன்னை கடவுளாக்கும்...

### ரஜீவன்


மது குடித்துவிட்டு வாகனம் ஓட்டுபவர் மனித வெடிகுண்டுக்கு சமம்-கோர்ட்




அரசாங்கமே வெடி மருந்து சப்ளை பண்ணுது அவங்க மேல நடவடிக்கை எடுங்க யுவர் ஆனர்.

### யாதவி

நேரு சொன்னார் சோம்பேறித்தனமே மிகப் பெரிய எதிரி என்று...
காந்தி சொன்னார் உங்கள் எதிரியையும் நேசியுங்கள் என்று...
இப்ப மாமா சொன்னத கேக்குறதா இல்ல தாத்தா சொன்னத கேக்குறதா...



### துஷியா



இறந்த பின் நரகம் சென்ற கணவன்-நான் என் மனைவிக்கு ஒரு போன் பண்ணனும்...
பூதம்- தாராளமா பண்ணிக்கோ...
கணவன்- அதுக்கு கட்டணம் எவ்வளவு
பூதம்-அதெல்லாம் ஒன்றும் இல்ல...
நரகம் to நரகம் FREE தான்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டங்களில் ஈடுபடுவது முற்றிலும் தவறானது

## திஸ்ஸ விதாரண

(கொழும்பு)

**கொவிட்-19 வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை நாட்டு மக்கள் அனைவரும் முறையாகக் கடைப்பிடித்தால்தான் வைரஸ் பரவலை முழுமையாக கட்டுப்படுத்த முடியும்.**



தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் தொழிற்சங்கத்தினர் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டங்களில் ஈடுபடுவது முற்றிலும் தவறான செயற்பாடாகும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

கொவிட்-19 வைரஸ் தாக்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அதிபர் - ஆசிரியர் சேவையில் சம்பளப் பிரச்சினை உள்ளது என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். இவர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்.

கோரிக்கைகளை வெற்றி கொள்ள போராட்டத்தில் ஈடுபடும் தருணம் இதுவல்ல. போராட்டத்தில் ஈடுபடும் போது எவரும் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கடைப்பிடிப்பதில்லை.

ஆகவே தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் போராட்டங்களில் ஈடுபடுவது முற்றிலும் வெறுக்கத்தக்கது.

ஒரு தரப்பினரது தவறான செயற்பாடுகள் ஒட்டுமொத்த நாட்டையும் பாதிக்கும். புதுவருட கொவிட் கொத்தணி பரவல் இவ்வாறே ஆரம்பமானது என்பதை நாட்டு மக்கள் மறந்து விடக்கூடாது.

பொதுமக்கள் தங்களின் சுய பாதுகாப்பு உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அனைத்து அறிவுறுத்தல்களையும் பொலிஸாரும் பொதுச்சுகாதாரப் பாதுகாப்புத் தரப்பினர் வழங்குவார்கள் என எதிர்பார்க்க முடியாது.

. கொவிட்-19 வைரஸ் தாக்கத்தை முழுமையாக கட்டுப்படுத்தும் செயற்றிட்டம் பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் ஒன்றினைத்து வகுக்க வேண்டும் எனவும் திஸ்ஸ தெரிவித்தார். (நி-5)

# தடுப்பூசியை தொடர்ந்து சீனாவிலிருந்து வருகிறது ஒட்சிசன்

(கொழும்பு)

கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க சீனாவில் இருந்து ஒட்சிசனை இறக்குமதி செய்ய மருந்து ஒழுங்குமுறை மற்றும் வழங்கல் இராஜாங்க அமைச்சு தயாராகி வருகிறது.

கொவிட் நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க தினசரி தேவைப்படும் ஒட்சிசனின் அளவு 45,000 லீற்றரைத் தாண்டியுள்ளதால், சீனாவில் இருந்து ஒட்சிசனை பாதுகாப்பான கையிருப்பாகப் பெற அமைச்சு முடிவு செய்துள்ளது.

இந்த வகையில் 120,000 லீற்றர் ஒட்சிசன் இறக்குமதி செய்யப்படும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. கொவிட் தொற்று நோயின் தொடக்கத்தில், தினமும் 21,000 லீற்றர் ஒட்சிசன் மட்டுமே தேவைப்பட்டது. மூன்றாவது அலையில் அந்த எண்ணிக்கை இரட்டிப்பாகியது.

இதற்கிடையில், பல்லேகலேயை தளமாகக்கொண்ட தனியார் நிறுவனமொன்று 1.5 மில்லியன் ஒட்சிசன் சிலிண்டர்களை தயாரித்து சுகாதார அமைச்சிடம்ஒப்படைக்க முடிவு செய்துள்ளது. (நி-5)

# அலுவலகங்களை திறப்பதில் தவறில்லை

## முன்னாள் ஜனாதிபதி சிறிசேன



(கொழும்பு)

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி, அரசாங்க அலுவலகங்களைத் திறப்பதில் எந்தவிதமான தவறுகளும் இல்லை என முன்னாள் ஜனாதிபதியும் சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன எம்.பி. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும்கொரோனா முடக்க நிலைகளில், உலகின் ஏனைய நாடுகள் இந்த நிலைமையை எவ்வாறு கையாண்டுள்ளன என்பதைப் பார்க்க வேண்டும் எனவும் நாடு முகங்கொடுக்கும் ஆபத்தான நிலையை உணர்ந்து கொள்ளும் அதேவேளை, நாட்டையும் தொடர்ந்து மூடி வைத்திருக்க முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றி அரசாங்க அலுவலகங்களைத் திறப்பதில் எந்தவிதமான தவறும் கிடையாது. அரசாங்க அலுவலகங்களை தொடர்ந்து மூடிவைக்க முடியாதெனவும் அவர் தெரிவித்தார். (நி-5)

# இன்று ஒரு தகவல்

## தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## திக்குவாய்

ஒரு அம்மாவுக்கு ரொம்பக் கவலை. பையன் திக்கித் திக்கிப் பேசுறானாம். திக்குவாய் என்பது ஒரு நோய் அல்ல. அது ஒரு குறைபாடு அவ்வளவுதான். ஆரம்பத்திலே மருத்துவர்களிடம் போனால் அதை குணப்படுத்திடலாம்.

முக்கியமாக இரண்டு வயதிலிருந்து ஐந்து வயது வரை உள்ள குழந்தைகளை இது அதிகமாகப் பாதிக்கின்றது.

இன்னும் சொல்லப்போனால் பெண் குழந்தைகளை விட ஆண் குழந்தைகள் தான் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். சரி இந்த திக்குவாய் எதனாலே ஏற்படுகிறது?

அதற்கு மூன்று காரணங்கள் சொல்லுகிறார்கள்! ஒன்று குழந்தைகளின் மனம் தொடர்பானது. இன்னொன்று குழந்தைகள் பேசப்பழகும் போது பெற்றோர்கள் நடந்து கொள்கின்ற முறை.

மூன்றாவது காரணம் பரம்பரை, அல்லது பிறவிக் குறைப்பாடு. சின்ன வயதிலே குழந்தைப் பருவத்திலே ஏற்படுகின்ற பயம், பதற்றம், பரபரப்பு, சோகம், வெட்கம், அதிருப்தி, அவநம்பிக்கை, அன்புக்கு ஏக்கம் இதெல்லாம் தான் மனம் தொடர்பான காரணங்கள்

இரண்டாவதாகச் சொல்லப்பட்ட பெற்றோர்கள் நடந்து கொள்கின்ற முறை. அதுவும் ஒரு முக்கியமான காரணம்.

வீட்டிற்கு வந்திருக்கின்ற விருந்தினர்கள் முன்னால் குழந்தையை அதட்டுவது, பயமுறுத்துவது, பின்பு பேசச் சொல்லுவது இதனாலே என்ன ஆகும் என்றால் குழந்தை யோசிக்கும்.

ஏதாவது தவறாகப் பேசிடுவோமோ என்கிற பயத்திலே திக்கித் திக்கிப் பேச ஆரம்பிக்கும்!

ஆரம்பத்திலேயே அதைத் திருத்துவதாக நினைத்துக் கொண்டு அப்படிப் பேச வேண்டும், இப்படிப் பேச வேண்டும் என்று வாத்தியார் தோரணையிலே வீட்டிலேயே பள்ளிக்கூடம் நடத்த ஆரம்பிக்கக்கூடாது.

மூன்றாவது காரணம் பரம்பரை என்று சொன்னோமே அது எப்படி என்றால் சில குழந்தைகளுக்கு பாரம்பரியத்தாலே நாக்கு, உதடு, மேலண்ணம், குரல் மடிப்புக்கள் இவைகளிலே பிறவியிலேயே குறைபாடுகள் இருக்கலாம்.

இதனாலே பேச்சு சரியாக வராமல் அது திக்குவாயாக மாறலாம். மருத்துவப் புள்ளி விபரம் என்ன சொல்கிறது தெரியுமா? இந்த உலகத்திலே நூற்றிலே ஒருவருக்கு திக்குவாய் இருக்குதாம்.

வரலாற்றுப் புகழ்பெற்ற அரிஸ்டோட்டில், மோசஸ், சார்லஸ் லாம்ப் இவ்வாறான பெரிய அறிஞர்களுக்குக் கூட திக்குவாய் இருந்திருக்கிறது. சின்ன வயதிலேயே வைத்தியம் செய்தால் சுலபமாக சரி செய்யலாம்.

மூன்று விதமான சிகிச்சை உண்டு அதற்கு.

ஒன்று... சைக்கோ தெரப்ஃபி மனமாற்றப் பயிற்சி. இன்னொன்று... ஸ்பீச்தெரஃபி பேச்சுப் பயிற்சி. மூன்றாவது... மருந்துகள்.

மனநல மருத்துவர்கள் திக்குவாய் உள்ள குழந்தைகளிடம் பக்குவமாய் பேசி பயம், பதற்றம் எல்லாவற்றையும் போக்குவார்கள். குழந்தையினுடைய அப்பா, அம்மாவிடம் பேசி எப்படி குழந்தைகளிடம் பேச வேண்டும், பழக வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பார்கள்.

பேச்சுப்பயிற்சி என்பது குழந்தையை படிக்கச் சொல்லி எந்த வார்த்தை திக்குதோ அதை சரியாக வாசிக்க வைக்கிறது. மருந்து கொடுத்தும் மனதை பக்குவப்படுத்தலாம். பிறவிக் கோளாறு இருந்தால் அறுவை சிகிச்சை மூலம் சரி செய்யலாம்.

எல்லாவற்றையும் விட முக்கியமாக பெற்றோர்கள் குழந்தைகளிடம் அன்பாகவும், அரவணைப்பாகவும் நடந்துகொள்ள வேண்டும். அவர்களை பயமுறுத்தக்கூடாது. கவனமாகப் பேச வேண்டும்!

ஆனால் இந்தக் காலத்துக் குழந்தைகளிடம் பெற்றோர்கள் தான் கவனமாகப் பேச வேண்டும்! ஒரு குடும்பத்திலே... ஒரு அம்மா தன் பிள்ளைகளிடம் சொன்னார்... "இதோ பாரப்பா... ஒரு பந்தயம். ஒருநாள் முழுவதும் உன் இரண்டு கைகளாலும் வாயைப் பொத்திட்டு பேசாமல் இருந்தால் உனக்கு 100 ரூபா பரிசு" என்றார்.

உடனே பையன் . "அட போம்மா எப்ப பார்த்தாலும் அப்பா ஜெயிக்கிற மாதிரித்தான் பந்தயம் போடுறீங்கள்!" என்றானாம்!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மாகாண சபைகளின் காணி அதிகாரங்கள் பற்றிய சர்ச்சை - ஒரு தொகுப்பு

44

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



(பொதுவாக அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்ட அரச காணிகள் 8 வருடம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் பாவனையில் இல்லாமல் கைவிடப்பட்டிருப்பின் அக்காணிகளுக்கே இச் சட்டம் பொருந்தும்.) இச்சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரங்கள் பிரதேச செயலாளர்கள் ஊடாக செயற்படுத்தப் படுகின்றன.

மேற்கூறப்பட்ட சட்டங்களின் மூலம் மத்திய அரசாங்கம் காணிகளை சுவீகரிக்கவும், காணிகளை பலவந்தமாகப் பெறவும் செய்கிறது. இது ஒருங்கிணை நிரலில் உள்ள விடயமாதலால் காணி சுவீகரிப்பதானால் அல்லது காணிகளை பலவந்தமாகப் பெறுவதானால் நேரடியாக அரசாங்க அதிபர் அல்லது நேரடியாக பிரதேச செயலாளர்களுக்கு மத்திய காணி அமைச்சு உத்தரவிட முடியாது.

மாகாண காணி அமைச்சின் ஊடாக செயற்படுத்த வேண்டும். மாகாண காணி அமைச்சிடம் அனுமதி பெற வேண்டும். வடக்கு-கிழக்கு மாகாண சபைகளைப் பொறுத்தமட்டில் இது நடைமுறையில் இல்லை. அரசாங்கம் இதனை நேரடியாகவே செய்ய முற்படுகிறது. மேலும் நியதிச் சட்டங்கள் இல்லாததால் மாகாண சபைகளுக்கு காணிகளை சுவீகரிக்கவோ அல்லது காணிகளை பலவந்தமாகப் பெறவோ முடிவதில்லை.

### அரச காணிகளை பராதீனம் செய்யும் அதிகாரம்

அரச காணிகளை பராதீனம் செய்வதற்கு பல காணிச் சட்டங்கள் இருக்கின்றன. அவை பற்றி இப்போது பார்ப்போம்.

### 1) 1935 ஆம் ஆண்டின் காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் இல 19.

பலதரப்பட்ட சமூகங்கள் ஊடாக அரச காணிகளை அபிவிருத்தி செய்தல், விவசாயிகளைப் பாதுகாத்துக் கொள்ளல் போன்ற நோக்கங்களுக்காக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் 1935 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இக் கட்டளைச் சட்டத்தின் படி அரசாங்கத்தின் காணிகளை நிர்வகித்தல், பாதுகாத்தல், பகிர்ந்தளித்தல் போன்ற பொறுப்புகள் காணி ஆணையாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டது.

இத்திணைக்களம் அரச காணிகளை அரச அதிபர் மூலம் பாரிய விவசாயக் குடியேற்றங்கள், உயர் நிலத்திட்டங்கள், கிராமிய விரிவாக்கல் திட்டங்கள் போன்றவற்றிற்கு பகிர்ந்தளித்தது.

அரச காணியை அபிவிருத்தி செய்வதற்காக காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனுமதிப்பத்திரங்கள் "LDO permits" என அழைக்கப்படுகின்றன. இவ்வாறு ஒரு காணிக்கு வழங்கப்படும் "LDO permits" கள் பொதுவாக காணியில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும். அல்லது அபிவிருத்தி மேற்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்படவே வழங்கப்படுகின்றன. காணியைப் பெறுவோர் பொதுவாக காணிக் கச்சேரி மூலமே தெரிவு செய்யப்படுகிறார்கள். அவ் "LDO permits" ஐ ஒவ்வொரு வருடமும் குறிப்பிட்ட கட்டணம் செலுத்தி புதுப்பித்தல் வேண்டும். பிரதேச செயலாளர் அவ் "LDO permits" ஐ புதுப்பித்தல் செய்வதா? அல்லது அதற்குப் பதிலாக காணி அளிப்புப் பத்திரம் (grant) வழங்குவதா? என்பதைத் தீர்மானிப்பார்.

**காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணி ஒன்றை அன்பளிப்பாக (grant) பெறத் தகைமை.**

- இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
- காணி அபிவிருத்திக்கட்டளை சட்டத்தின் கீழ் அனுமதிப்பத்திரமொன்று (permit) வழங்கப் பட்டிருத்தல் வேண்டும்.
- வழங்கப்பட்ட காணி பிரதேச செயலாளரால் திருப்திப்படும் வண்ணம் அபிவிருத்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.
- காணிக்கு நில அளவை அத்தியட்சகரின் வரைபடம் பெறப் பட்டிருக்க வேண்டும்.
- குடியிருப்பிற்கு வழங்கப்பட்ட காணியாயின் ஒரு வருடத்திற்கு மேலும் நீர்ப்பாசன காணியாயின் இரு வருடத்திற்கு மேலும் திருப்திப்படும் வண்ணம் அபிவிருத்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
- காணி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட நபர் குறித்த காணியில் குடியிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த தகைமைகளை பூர்த்தி செய்திருப்பின் பிரதேச செயலகமூடாக ஆவணம் தயாரிக்கப்பட்டு மாகாண காணி ஆணையாளரின் அனுமதியுடன் ஜனாதிபதி காரியாலயத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு ஜனாதிபதியால் காணிக்கான அளிப்பு ஒப்பமிடப் படும்.

இச்செயற்பாட்டில் மாகாண சபையின் பங்கு என்ன? என்ற கேள்வி எழும். 13 ஆவது திருத்தம் 1987 இல் வந்தபோது பிரதேச செயலகத்தின் தொழிற்பாடுகள் மாகாண சபை விடயத்தில் இருந்தன. அதிகாரப்பரிமாற்றச்சட்டத்தின் **(Transfer of Powers Act)** மூலம் பிரதேச செயலாளர்கள் மத்திய அரசின் கீழ் கொண்டு வரப்பட்டதோடு மத்திய அரசின் பிரதேசத் தலைவர்களாகவும் உருவாக்கப் பட்டார்கள். மேலும் அரச காணி விடயங்களும் அவர்கள் கைகளில் விடப்பட்டன. இந்த ஏற்பாடுகள் மாகாண காணி நிர்வாகிகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வரச் செய்தன. அதாவது இச்செயற்பாடு காணி அதிகாரங்களை மாகாண அரசிடமிருந்து நீக்கிவிட்டன. இவ்விடயம் ஒருங்கிணை நிரலில் வருவதால் காணி பராதீனப் படுத்தல் சம்பந்தமான எந்தவொரு விடயமும் மாகாண சபையின் ஆலோசனையுடனேயே செய்யப் படல் வேண்டும்.

### 2) அரச (முடிக்குரிய) காணிக் கட்டளைச்சட்டம் இல.8 1947.

1947 இல் முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டம் செயற்படுத்தப் பட்டதன் பின்பு பலதரப்பட்ட நபர்களுக்கும் திணைக்களங்களுக்கும் நிறுவனங்களுக்கும் அலுவலக, வர்த்தக நடவடிக்கைகளுக்காகவும் குடியேறுவதற்காகவும் கிராம சபைகளின் தேவைகளுக்காகவும் காணிகள் வழங்கப்பட்டன. மேலும் இக்காணிகள் நீண்ட காலக்குத்தகை, குத்தகை, விலைக்கு, சொத்துரிமை மேலாட்சி, ஒரு குறிப்பிட்ட பாவனைக்கு அனுமதித்தல், அல்லது அதிகாரம் அளித்தல் போன்ற நிபந்தனையின் கீழேயே வழங்கப்பட்டன. இச்சட்டத்தின்கீழ் கடல், பெரு வாவிகள், ஆறுகள், குளங்கள், பாதைகள் போன்றவற்றின் பாதுகாப்புக்காக நில ஒதுக்கீடுகள் செய்யப்பட்டதோடு அவை அரச காணிகளாகக் கருதப்பட்டு, அவற்றை நிர்வகிப்பதற்கும் விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. மேற்கூறப்பட்ட செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த நாட்டின் சார்பாக ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதேபோல் அரசிடம் கையளிக்கப்படும் காணிகளை அரசு சார்பாக பொறுப்பேற்பதற்கும் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. ஜனாதிபதிக்குரிய இந்த அதிகாரம் நடைமுறையில் காணி அமைச்சர், காணி ஆணையாளர் நாயகம் மற்றும் பிரதேச செயலாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பு 1:- 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க காணிகள் கட்டளைச்சட்டத்தின் மூலம் அரச காணிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு காணி ஆணையாளர் நாயகத்திற்குக் கூடிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன. இதன் கீழ்:

- தனிநபர்களுக்கும் கம்பனிகளுக்கும் அரச காணிகளை நீண்ட காலமாகக் குத்தகையில் வழங்கல்.
- பிரதேச அதிகார சபைகள் மற்றும் படைகளுக்கு உடைமைச் சொத்துவம் மூலம் அரச காணிகளை வழங்குதல்.
- சமயம் சார்ந்த அல்லது அறஞ்சார்ந்த மற்றும் அறிவியல் நடவடிக்கைகளுக்கென விசேட அளிப்புப்பத்திரங்கள் அல்லது விசேட குத்தகை முறிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- சமய விவகாரங்களுக்கென அரச காணிகளை வழங்குதல்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 மணி நேர தடுப்பூசி மையத்தை பார்வையிட்டார் ஜனாதிபதி கோட்டா





(கொழும்பு)

கொழும்பு விகாரமகா தேவி பூங்காவின் திறந்த வெளி அரங்கில் இராணு வத்தினரால் இயக்கப்படும் 24 மணிநேர கொவிட்-19 தடுப்பூசி செலுத்தல் மைய த்தை ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷ நேற்று முன் தினம் இரவு பார்வையிட் டார்.

இராணுவ நோய்த் தடுப்பு மற்றும் மனநல பணிப்பக த்தின் வழிகாட்டலுக்கமைய தேசிய தடுப்பூசி வழங்கும் வேலைத்திட்டத்தை ஊக்கு விக்கும் வகையில் இலங்கை இராணுவ மருத்துவ படைய ணியின்சிப்பாய்களால் கொழு ம்பு விகாரமகாதேவி பூங் காவின் திறந்தவெளி அரங் கில் ஓகஸ்ட் 1 மற்றும் 2 ஆம் திகதிகளிலும் மற்றும் பத்தர முல்லை "தியத உயன" இரா ணுவ தடுப்பூசி மையத்தில் ஓகஸ்ட் 2 ஆம் திகதி தொடக் கம் புதன்கிழமை வரையில் அஸ்ட்ராசெனகா தடுப்பூசி களை 24 மணிநேரமும் வழங்குவதற்கு தீர்மானிக் கப்பட்டமை குறிப்பிடத்த க்கது. (நி-5)

# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்



## விரதங்கள்

## தம்பதிகள் ஒற்றுமைக்கு உதவும் கேதார கௌரி



நலன் களும் ஏற்படும். இழந்த செல்வம் மீண்டும் கிடைக்கும்.

முன்னொரு கால த்தில் ஒரு அரசன், எதி ரியிடம் தன் நாட்டை இழந்து காட்டில் சென்று வசித்து வந் தார். அந்த அரசனு க்கு புண்ணியவதி, பாக்கியவதி என்ற 2 மகள்கள் இருந்தனர். அவர்கள் ஒருமுறை கங் கைக்கரைக்கு சென்றனர்.

பரமேஸ்வரனின் இடப்பாகம் பெற்ற பார்வதிதேவி, 'நான் கடை ப்பிடித்த இந்த கேதாரகௌரி விர தத்தை, யார் மேற்கொண்டாலும், அவர்களுக்கு சகல செல்வங்களை யும், முக்திப்பேற்றினையும் வழங்க வேண்டும்' என சிவனிடம் வேண்டிக் கொண்டார். அதன்படியே பர மேஸ்வரனும் வரம் தந்தார்.

**பலன்கள்**

பெண்கள் கேதாரகௌரி விரத த்தை இடைவிடாமல் 21 நாட்கள் பக்தியுடன் கடைப்பிடித்து வந்தால், சகல ஐஸ்வரியங்களையும் பெறுவர். தீர்க்க சுமங்கலியாக வாழ்வர். இழ ந்த பொருள் கிடைக்கும்.

குழந்தை பாக்கியம், தன, தானிய சம்பத்துகள் உண்டாகும். கணவன்-மனைவி ஒற்றுமையும், குடும்ப சுக

அங்கு தேவகன்னியர்கள் பக்தியுடன் கேதாரகௌரி விரதம் இருப்பதை பார்த்தனர். அவர்களி டம் இருந்து நோன்பு கயிற்றை வாங்கி கையில் கட்டிக் கொண்ட னர்.

அப்போது அவர்களு க்கு இழந்த பொருள் எல்லாம் மீண்டும் கிடைத்தது. பாக்கியவதி அந்த நோன்பு கயிற்றை அவிழ்த்து தன் வீட்டின் அவரைப்பந்தலில் போட்டுவிட்டாள்.

புண்ணியவதி மிகுந்த பக்தியுடன் தவறாமல் விரதம் கடைப்பிடித்து வந்தாள். இதனால் அவளுக்கு மேலும், மேலும் செல்வம் பெருகி யது. பாக்கியவதி வறுமையில் வாடினாள்.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## தனிமைப்படுத்தல் விதிமுறைகள் மீறிய மேலும் 94 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படு த்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணிநேரத்தில் 94 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 53 ஆயிரத்து 30 நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5)

## மான்களை வேட்டையாடிய இருவர் கைது

(கொழும்பு)

யால கல்கே சரணாலயப் பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து மான்களை வேட்டையாடிய இரண்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த தகவலின்படி அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சரணாலயத்திற் குள் நுழைந்து காட்டு விலங்குகளை வேட்டையாடி அவ ற்றின் இறைச்சியை நீண்டகாலமாக விற்பனை செய்து வந் தது விசாரணையின்போது தெரியவந்துள்ளது. (நி-5)

## அந்தமான்-நிக்கோபார் தீவுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

(கொழும்பு)

அந்தமான் - நிக்கோபார் தீவுகளில் 6.1 ரிக்டர் அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

நேற்றுக் காலை 7 மணி முதல் 9 மணி வரை 5.9, 6.1 மற்றும் 4.6 ஆகிய ரிக்டர் அளவுகளில் மூன்று முறை நிலநடுக்கம் ஏற்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 160 | 200 |
| உருளைக்கிழங்கு | 130 | 140 | 140 | 150 |
| பச்சைமிளகாய் | 200 | 180 | 200 | 240 |
| தக்காளி | 100 | 100 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 60 | 40 |
| கோவா | 180 | 160 | 180 | 200 |
| கரட் | 160 | 180 | 200 | 200 |
| பூசணி | 100 | 70 | 90 | 120 |
| புடோல் | 80 | 70 | 80 | 120 |
| வாழைக்காய் | 50 | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 170 | 160 | 250 | 200 |
| பெரிய வெங்காயம் | 100 | 110 | 100 | 120 |
| பாகற்காய் | 300 | 200 | 240 | 350 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 120 |
| கருணைக் கிழங்கு | 160 | 180 | 160 | 180 |
| பயற்றங்காய் | 140 | 100 | 80 | 120 |
| லீக்ஸ் | 200 | 260 | 280 | 300 |
| பீற்றூட் | 140 | 130 | 120 | 160 |
| கறிமிளகாய் | 300 | 300 | 300 | 320 |
| முருங்கைக்காய் | 150 | 120 | 200 | 200 |
| போஞ்சி | 250 | 300 | 320 | 350 |
| கத்தரிதம்புள்ள | 140 | 150 | 160 | 160 |
| கீரை - 1 பிடி | 70 | 50 | 50 | 60 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 60 | 50-70 |
| இராசவள்ளி | -- | -- | 350 | -- |
| வெங்காயப்பூ | 180 | 160 | 120 | 280 |
| முள்ளங்கி | 120 | 90 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 50 | 20 | 30 |
| ஈரப்பலா | 60 | 40 | 80 | 60 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மேதைகள்



முன்னொரு சமயம் விஷ்லர் என்ற ஓர் ஓவிய நிபுணர் இருந்தார். அவர் ஓவிய நிபுணர் மட்டுமல்ல. தலை சிறந்த மேதையும் கூட.

அவர் வசித்து வந்த ஊரில் மற்றொரு ஓவியர் ஒருவர் இருந்தார். அவர் பெயர் ரோசெட்டி என்பதாகும்.

ஒரு நாள் விஷ்லர், ரோசெட்டியின் வீட்டுக்குச் சென்றிருந்தார். ரோசெட்டி அவரிடம் அப்போது தான் வரைந்து கொண்டிருந்த ஓர் ஓவியத்தை எடுத்து வந்து காட்டினார்.

அது பற்றி விஷ்லரின் அபிப்பிராயத்தை அவர் கேட்டார். விஷ்லர் அந்த ஓவியத்தைப் பார்த்தார்.

உண்மையிலேயே அந்த ஓவியம் மிக அற்புதமாக இருந்தது. ஆகவே, அவர் ரோசெட்டியை மனம் திறந்து பாராட்டினார். உண்மையில் அப்போது ரோசெட்டி அந்த ஓவியத்தை முழுதாக முடிக்கவில்லை.

வண்ணம் தீட்ட வேண்டிய இடங்கள் நிறைய இருந்தன. ஆகவே அவர், "இந்த இந்தப் பகுதிகளில் வண்ணம் தீட்டியிருந்தால் இன்னும் அற்புதமாக இருக்குமே" என்று தன் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார்.

"இன்னும் சில நாட்களிலே அந்தப் பணியும் முடிந்து விடும். நீங்கள் இன்னும் இரண்டு மூன்று நாட்கள் கழித்து இங்கு வந்திருந்தால் முழுமை பெற்ற படத்தைப் பார்த்திருப்பீர்கள்" என்று ரோசெட்டி பதில் கூறினார்.

ஒரு வாரம் ஆயிற்று. தற்செயலாக அவரைக் கடை வீதியில் சந்தித்தார் விஷ்லர்.

"என்ன மிஸ்டர் ரோசெட்டி, உங்களுடைய படம் எந்த அளவில் இருக்கிறது?" என்று அவர் கேட்டார்.

"அந்தப் படம் நிறைவு பெற்றுவிட்டது. இப்போது அந்தப் படத்துக்குச் சட்டமிடுவதற்காக ஒரு சட்டத்தைச் செய்யச் சொல்லி இருக்கிறேன். அதை எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

அதுவும் வந்து, சட்டமும் இட்டுவிட்டால் அந்தப் படம் பூரண நிறைவு பெற்று விட்டது என்று பொருள்" என்று கூறினார். (தொடரும்)

# மகாபாரதம்




பரசுராமருடன் பல நாள் போர் புரிந்த வீரராகிய அந்தப் பீஷ்மர் யுத்த களத்தில் என்னால் வீழ்த்தப்பட்டார்.

இளமைப் பருவம் தொடங்கி வளர்த்து எங்களையெல்லாம் ஆளாக்கிய அந்த உத்தமரைக் கேவலம் பேராசை காரணமாக இந்த நிலைக்கு ஆளாக்கினேன்.

ஒரு பொய்யைச் சொல்லி துரோணரைச் சாகடித்தேன். இதை விட வேறென்ன பாவம் இருக்க முடியும்? சத்தியம் தவறாதவன் என்ற பெயர் எனக்கு எப்படி பொருந்தும்? பொய்யனாகிய நான் இந்தப் பூமண்டலத்தை ஆண்டு பெறப்போவது என்ன?

புறங்கொடாப் போர் வீரனான என் தமையனைக் கொன்றேனே. இதைவிட வேறு எது பாவம்?

ஒரு சிங்கக் குட்டியென வலம் வந்த அபிமன்யுவைத் துரோணரின் சக்கர வியூகத்தில் தள்ளிக் கொலை செய்தேனே. பாவியல்லவா நான்? இனி உலகில் அத்தகைய வீரன் பிறப்பானா? என் பொருட்டு திரௌபதியின் ஐந்து பிள்ளைகளும் கொல்லப்பட்டனரே.

திருஷ்டத்துய்மனும் விராடனும் எண்ணற்ற வீரர்களும் என்னால் அல்லவா மாண்டார்கள்?

இவர்கள் அனைவரையும் இழந்த பிறகு நான் மட்டும் ஏன் உயிர் வாழ வேண்டும்? நான் உண்ணா நோன்புடன் உயிர் துறக்கத் தயாராகி விட்டேன்.

அனுமதி கொடுங்கள்" என மனம் நொந்து வியாசர் முதலான மகரிஷிகளிடம் கேட்டுக் கொண்டார் தருமர்.

**கண்ணன் தருமருக்கு உரைத்தல்**

இப்போது கண்ணன் தருமரை நோக்கி.. "நீ கவலைப்படுவதில் அர்த்தம் ஒன்றுமில்லை. மனதைக் கொன்றழிக்கும் கவலையிலிருந்து மீள்வாயாக.

போர்க்களத்தில் மாண்டவர் அனைவரும் வீரப்போர் புரிந்து மாண்டவரே! யாரும் கோழைகளாக புறமுதுகு காட்டி ஓடுகையில் கொல்லப்படவில்லை.

அவர்கள் தங்கள் கடமைகளை முடித்துக் கொண்டு சுவர்க்கம் சென்றனர். அவர்கள் குறித்து நீ புலம்புவதில் நியாயம் இல்லை. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுக்கையை வாங்கலாம், உறக்கத்தை வாங்க முடியாது. புத்தகத்தை வாங்கலாம், அறிவை வாங்க முடியாது. மருந்தை வாங்கலாம், ஆரோக்கியத்தை வாங்க முடியாது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மருத்துவர்களின் எச்சரிக்கையை உதாசீனம் செய்யாதீர்கள்

இலங்கையில் கொரோனாத் தொற்றின் கோரதாண்டவம் உச்சமாயிற்று.

நாளுக்கு நாள் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

கூடவே கொரோனாத் தொற்றால் இறப்பவர்களின் எண்ணிக்கையும் உயர்வடைந்து செல்வதை புள்ளிவிபரங்கள் உறுதி செய்கின்றன.

இதற்கு மேலாக, பிறநோய்கள் காரணமாக இறப்பவர்களையும் தற்கொலை செய்தவர்களையும் பரிசோதனை செய்யும்போது அவர்களுக்கு கொரோனா பொசிற்றிவ் என்பதாக இருக்கக்கூடிய முடிவுகள் மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன.

நிலைமை இதுவாக இருக்கையில் அரச மருத்துவர்கள், மருத்துவபீட விரிவுரையாளர்கள், பொதுசுகாதாரப் பரிசோதகர்கள் என்போர், எதிர்காலத்தில் கொரோனாத் தொற்று ஏற்படுத்தக்கூடிய பேராபத்தை எச்சரிக்கை செய்த வண்ணமுள்ளனர்.

இதில் மருத்துவ நிபுணர் ஒருவர் விடுத்த எச்சரிக்கையில், வைத்தியசாலைகளில் இடவசதிகளின்றி கொரோனா நோயாளிகள் அலைந்து திரியும் நிலை ஏற்படும் எனக் கூறியுள்ளார்.

பிரஸ்தாப மருத்துவ நிபுணரின் எச்சரிக்கையை எவரும் சாதாரணமான விடயமாகக் கருதிவிட முடியாது.

பொதுவில் மருத்துவர்களும் பொதுசுகாதாரப் பரிசோதகர்களும் கொரோனா தொடர்பில் விடுத்த எச்சரிக்கைகள் அப்படியே அமுலாகி வருகின்றன.

இந்நிலையில் எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்து வைத்தியசாலைகளில் இடமின்றி அந்தரிக்கின்ற சூழ்நிலையும் ஒட்சிசன் தட்டுப்பாடும் ஏற்படும் என மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

இது தொடர்பில் அரசாங்கமும் படைத்தரப்பும் அதீத கவனம் செலுத்த வேண்டும்.

எனினும் இதுவிடயங்களில் அரசாங்கமோ அன்றி கொரோனா கட்டுப்பாட்டுத் தடுப்புச் செயலணியோ கரிசனை கொள்வதாகத் தெரியவில்லை.

மாறாக கொரோனாத் தொற்று ஏற்பட்டால் – அதிகரித்தால் அதற்கு பொதுமக்களே காரணம் என்பதாக அரசாங்கத்தின் நிலைப்பாடு உள்ளது.

அரசாங்கத்தின் இந்தப் போக்கு மிகப்பெரும் ஆபத்தை ஏற்படுத்தும் என்பது அனுமானிக்கத்தக்கது.

ஆகையால் கொரோனாத் தொற்றில் இருந்து ஒவ்வொருவரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வதில் அதிகவனம் செலுத்த வேண்டும்.

இதைவிடுத்து அரசாங்கம் எம்மைக் காப்பாற்றும். எங்களைக் காப்பாற்றுகின்ற பொறுப்பு அரசாங்கத்தினுடையது என்று கருதி எமக்கிருக்கக்கூடிய பொறுப்பை தட்டிக் கழித்தால், அதனால் ஏற்படும் பாதிப்பையும் இழப்பையும் தாங்கிக் கொள்வது தவிர்க்க முடியாததே.

# வடக்கில் 60 சதவீதத்திற்கு மேற்பட்டோர் தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றுள்ளனர்

## வடமாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் மக்கள் தொகையில் 30 வயதுக்கு மேற்பட்ட 62.09 சதவீதமானோர் கோவிட்-19 தடுப்பூசியின் ஒரு டோஸை பெற்றுள்ளனர்.

இந்த தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்டோரின் எண்ணிக்கை 6 இலட்சத்து 57 ஆயிரத்து 547 பேர் என கணக்கிடப்பட்டுள்ளது. அவர்களில் நேற்றுவரை 4 இலட்சத்து 8 ஆயிரத்து 284 பேர் கோவிட்-19 தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றுள்ளனர். இது மொத்த எண்ணிக்கையில் 62.09 சத வீதமாகும்.

வடக்கில் மன்னார் மாவட்டத்தில் 67.54 சதவீதமானோர் கோவிட் -19 தடுப்பூசியின் முதல் டோஸை பெற்றுள்ளனர். அடுத்தபடியாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 63.70 சதவீதமானோர் முதல் டோஸைப் பெற்றுள்ளனர்.

இந்தப் பட்டியலில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி மாவட்டங்கள் முறையே 3,4,5ஆம் இடங்களில் உள்ளன. (ம-3.33)

## தனது சபதத்தை கைவிட்டு கோவிட் தடுப்பூசி போட்டார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்று கோவிட்- 19 தடுப்பூசியைப் போட்டுக்கொண்டார்.

நாட்டு மக்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடும்வரை நான் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள மாட்டேன் என சஜித் பிரேமதாச தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் எனக்கு கோவிட் தொற்றுக்காக சிகிச்சை அளித்த மருத்துவர்களின் கடுமையான ஆலோசனையின்பேரில் நான் தடுப்பூசியை எடுத்துக் கொண்டேன் என அவர் நேற்று தனது டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.

தடுப்பூசி போடத் தவறினால் கோவிட் தொற்று மீண்டும் ஏற்படலாம் என்றும் அது ஆபத்தானதாக இருக்கும் என்றும் மருத்துவர்கள் கடுமையாக எச்சரித்தனர்.

எனது தற்போதைய உடல்நிலையின்படி, நான் அவர்களின் பணிப்பை ஏற்றுக்கொண்டேன் எனவும் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ். வல்வெட்டித்துறையில் மதியம் தடுப்பூசி பெற்றவர் நள்ளிரவு திடீர் மரணம்

### பி.சி.ஆர் சோதனைக்கு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்வெட்டித்துறை - ஊறணியை சேர்ந்த பெண் ஒருவர் நேற்று முன்தினம் மதியம் தடுப்பூசி பெறுக் கொண்டவர் நேற்று முன்தினம் இரவு திடீர் சுகவீனமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார்.

குறித்த பெண் கொரோனா தடுப்பூசியின் முதலாவது செலுத்துகையைப் பெற்றுக்கொண்ட நிலையில் நள்ளிரவு திடீர் சுகவீனம் ஏற்பட்டிருக்கின்றது.

இதனையடுத்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்றபோது அவர் உயிரிழந்ததாக கூறப்படுகின்றது. இந்நிலையில் உயிரிழந்தவரின் சடலத்தின் மீது பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. (ம-03)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 05 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை

**யாழ். பிரதேசத்தில்** ஜம்புகோளப்பட்டினம், ஒய்வு விடுதி மாதகல், ஜம்புகோளப்பட்டினம் காட்டுப்புலம், குசுமாந்துறை மாதகல், மாதகல் இறங்கு துறை இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக்கழகம், வவுனியா வளாகம், எல்லப்பர் மருதங்குளம், சாளம்பை புதிய வீட்டுத் திட்டம், சாளம்பைக்குளம் பல்கலைக்கழக வளாகம், சமணங்குளம் விமானப் படைமுகாம்வேலங்குளம், மடுகுளம், புலவனூர், பூவரசங்குளம், சாளம்பைக்குளம், சாளம்பைக்குளம் வீட்டுத்திட்டம், செங்கற்படை, சின்னத்தம்பனை (மடுகுளம்), சோபாலபுளியங்குளம், தாலிக்குளம், வேளாங்குளம், கற்கடந்தகுளம், நீராவிபுரம், பெரியநொச்சிக்குளம் ஆகிய இடங்களிலும்

**மன்னார் பிரதேசத்தில்** புகையிரத நிலையம்- சாந்திபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# ஸ்ரீ இராமகிருஷ்ணரின் அமுதமொழிகள்



## குருவும் சீடரும்

ஞாயிறு விடுமுறை நாளாதலால் குருதேவரைத் தரிசிக்க பக்தர்கள் வந்திருந்தனர். அவர்களுடன் ம-விற்கு அறிமுகம் இல்லை. எனவே அவர் அறையின் ஒரு மூலையில் சென்று உட்கார்ந்தார். குருதேவர் மலர்ந்த முகத்துடன் பக்தர்களோடு பேசிக் கொண்டிருந்தார்.

பத்தொன்பது வயதான ஒரு வாலிபரைப் பார்த்த வண்ணம் ஆனந்தத்தால் பூரித்தபடி குருதேவர் பேசிக் கொண்டிருந்தார். அந்த இளைஞரின் பெயர் நரேந்திரர். கல்லூரி மாணவர். சாதாரண பிரம்ம சமாஜத்திற்கு அடிக்கடி சென்று வருபவர். ஆற்றலும் உறுதியும் மிக்க பேச்சு, ஒளி வீசும் கண்கள் பக்தனுக்குரிய தோற்றம் அவருடையது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## சிறுதானியங்களும் ஆரோக்கியமும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**(சென்றவாரத் தொடர்ச்சி)**

**சிறு தானியக் கஞ்சி/கூழ்**

கம்பு- 500 கிராம், கேழ் வரகு-1000 கிராம், குதிரை வாலி-500 கிராம்,வரகு-500 கிராம், சாமை.-250 கிராம், பொட்டுக்கடலை-100 கிராம்

வாணலியை அடுப்பேற்றி ஒவ்வொன்றையும் தனித்தனியாக ஓரளவிற்கு வறுத்து எடுக்கவும். பின்பு நன்றாக ஆறவிடவும். மிக்ஸியில் நன்றாக பொடியாக அரைத்து எடுக்கவும். இந்த மாவைப் பயன்படுத்தி கஞ்சி, கூழ் முதலிய தயாரித்து பயன்படுத்தலாம். இதனுடன் தேங்காய்ப் பால், சிறிது உப்பு, இஞ்சி, உள்ளி அரைத்த விழுது சேர்த்து கஞ்சியாக தயாரிக்கலாம்.

இந்த மாவிற்கே சிறிது சர்க்கரை, நல்லெண்ணெய் சேர்த்து களியாகவும் தயாரித்து எடுக்கலாம். சமிபாடு அடைந்த புரதச்சத்து, நார்ச்சத்து, மக்னீசியம் போன்ற சத்துக்கள் நிறைந்த ஆரோக்கியமான சிறுதானிய உணவாகும்.

**6 மாதத்திலிருந்து 5 வயது வரை உள்ள குழந்தைகட்கு போசாக்கான புரதம் நிறைந்த சிறு தானிய கஞ்சிமா.**

குதிரைவாலி-500 கிராம், பொட்டுக் கடலை- ஒரு சிறிய கப், சீரகம்- 1 தேக்கரண்டி, மிளகு-5, குதிரை வாலி அரிசியை 3 ,4 தடவைகள் நீரில் கழுவி வாணலியில் வறுத்து எடுக்கவும்.

உதிரி உதிரியாக வரும் வரை வறுத்து எடுக்கவும். தட்டில் மாற்றி ஆற வைக்கவும் மெதுவாக பொட்டுக்கடலையையும் வறுத்து எடுத்து தட்டுக்கு மாற்றி ஆறவிடவும். பின்பு சீரகத்தையும் மிளகையும் வறுத்து எடுக்கவும். எல்லாவற்றையும் ஆறவைத்து மிக்ஸியில் அரைத்து எடுக்கவும்.

ஒரு பாத்திரத்தில் 1 1/2 கப் நீர் விட்டு காய்



ச்சி அதில் 3 மேசைக் கரண்டி மேற்படி கஞ்சிமா சேர்த்து கிளறி கிளறி கஞ்சியாக தயாரித்து சிறிதளவு நெய் சேர்த்து கஞ்சியாக தயாரித்துக் கொடுக்கவும். குழந்தைகளுக்கு சிறுதானிய கஞ்சி இலகுவாக செரிமானமாவதுடன் கனியுப்புக்கள், உயிர்ச்சத்துக்கள், புரதச்சத்து, நிறைந்த போசாக்கான உணவாகும்.

**சிறு தானிய சத்துமா**

3 வயதுக் குழந்தைகளிலிருந்து பயன்படுத்தலாம்.

கொள்ளு-500 கிராம், ராகி-500 கிராம், கோதுமை அரிசி-500 கிராம்,சிவப்பு அரிசி-500 கிராம்,திணை-500 கிராம், வரகு-500 கிராம், கம்பு-500 கிராம்,சாமை-500 கிராம், குதிரை வாலி-500 கிராம், வெண் சோளம்-500 கிராம், மூங்கில் அரிசி-500 கிராம்,பார்லி-500 கிராம், 2,3 தடவைகள் நன்கு நீரில் கழுவி எடுத்து (பிசைந்து கழுவ வேண்டும்)

வடித்து தட்டில் பரவி துணி விரித்து அதில் கழுவி வடித்த தானியங்களைப் பரவி ஈரப்பதன் போகும்வரை உலர்த்தி எடுக்கவும். ஈரமில்லாத பாத்திரத்தில் எடுத்து அரிசி அரைக்கும் ஆலையில் திரித்து மாவாக்கி பின்பு கொட்டிப் பரவி ஆற விடவும். பின்பு கொஞ்சம் கொஞ்சமாக வாணலியில் வறுத்து ஆற விட்டு எடுக்கவும். இந்த மாவிலிருந்து பிட்டு, இடியப்பம் தயாரிக்கலாம்.

சத்துமாவாக தேங்காய்ப்பூ , சர்க்கரை சேர்த்து குழைத்தும் பயன்படுத்தலாம். அதிகளவு நார்ச்சத்து, புரதம், இரும்பு, மக்னீசியம், செப்புச்சத்துக்கள் அதிகமாக காணப்படும்.

இவ்விதமான சத்துக்களுக்கு பசியைக் கட்டுப்படுத்தும் தன்மை உண்டு. வாரத்தில் 2,3 நாட்களுக்கு இதனைப் பயன்படுத்தலாம்.. சமிபாட்டுப் பிரச்சி னைகள் இருக்கமாட்டாது. ஆனால் தற்காலத்தில் தீட்டப்பட்ட அரிசி வகைகளின் பாவனை அதிகம்.

ஆனால் நாம் நிச்சயமாக சிறுதானியங்களை சேர்க்கும் போது கிளைச்மிக் இன்டெக்ஸ் குறைவாக இருப்பதால் அதாவது ஒரு உணவு எவ்வளவு நேரத்தில் இரத்தத்தில் குளுக்கோசின் அளவை ஏற்படுத்துகிறது என்பதாகும். சிறு தானியங்கள் மிக மிகக் குறைவாகவே ஏற்படுத்தும்.


நார்ச்சத்து, நார்ச்சத்து, புரதச்சத்து உயிர்ச்சத்து $B_6$, மக்னீசியம், கல்சியம், இரும்புச் சத்துக்கள் என்பன தேவையான அளவில் சிறு தானியங்களில் கிடைக்கக்கூடியதாக இருக்கும்.

சிறு தானியங்கள் இருதயத்திற்கு பாதுகாப்பானது. இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக்கூடியது.

நீரிழிவை கட்டுப்படுத்தும் சமிபாட்டிற்கு உதவும் உடலில் உள்ள நச்சுத் தன்மையை அகற்றக்கூடியது. குடலில் புற்றுநோய் வராமல் தடுக்கவும் கூடியது. எனவே எமது பாரம்பரிய ஆரோக்கிய மான சிறுதானிய உணவுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

**சிறு தானிய அடை**

சாமை- 1/2 கப்



தினை- 1/2 கப்

கம்பு- 1/2 கப்

குதிரைவாலி அரிசி - 1/2கப்

நான்கு விதமான சிறு தானியங்களை எடுத்து,

கடலைப்பருப்பு -1 கப்

துவரம் பருப்பு-1/4 கப்

பச்சைப்பருப்பு-1/4 கப்

கறுப்பு உழுந்து- 1/2 கப்

மொத்தமாக 2 கப் அளவும் எடுத்துக் கொள்ளவும்.

அகலமான பாத்திரத்தில் எல்லாவற்றையும் ஒன்றாக சேர்த்து 4 ,5 தடவைகள் நீரில் நன்கு கழுவி பின் 4 கப் நீரில் இரவு முழுவதும் ஊற வைத்து காலையில் மிக்சியில் இஞ்சித் தோல் நீக்கி பொடித்து 1 தேக்கரண்டி பெருஞ் சீரகம் சேர்த்து ஊற வைத்து நீர் விட்டு 3 செத்தல் மிளகாய், தேவையான அளவு உப்பும் சேர்த்து கரகரப்பாக அரைத்து எடுத்து மஞ்சள்தூள் சேர்த்து சின்ன வெங்காயம் தேவையானால் அரிந்து சேர்த்து சிறிதளவு எடுத்து நல்லெண்ணெயில் போட்டு கறிவேப் பிலையும் போட்டு வதக்கி அடைமாவில் சேர்த்து நல்லெண்ணெய் அல்லது நெய்யில் பொரித்து எடுக்கவும்.

கொஞ்சம் சாப்பிட்டாலே திருப்தி ஏற்படும். புரதச்சத்து நார்ச்சத்து அதிகமாகக் காணப்படும் நோய் எதிர்ப் பாற்றலை அதிகரிக்கும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோவிட் தொற்...

வாகியுள்ள கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 4,645 ஆக அதிகரித்துள்ளது.

உயிரிழந்தவர்களில் 48 ஆண்களும், 26 பெண்களும் அடங்குவதாக அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-3)

## மாணவர்...

தெரிவித்துள்ளார்.

12 முதல் 18 வயது வரையான மாணவர்களுக்கு பைசர் மற்றும் மொடர்னா தடுப்பூசிகளைப் போடுவதற்கு கல்வி நிபுணர் குழு சமீபத்தில் சாதகமான முடிவை வழங்கிய நிலையில் அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

12 முதல் 18 வயது வரையானவர்களுக்கு போடக்கூடிய தடுப்பூசி குறித்துப் பரிசீலிக்குமாறு கல்வி அமைச்சு சுகாதார நிபுணர்களைக் கோரியுள்ளது.

சிறுவர்களுக்கு எந்தத் தடுப்பூசி பொருத்தமானது என ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வருமாறு ஜனாதிபதி எங்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் என சன்ன ஜயசுமன தெரிவித்தார். (ம-3)

## மன்னாரில்...

ரில் பெண் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

66 வயதுடைய பெண் ஒருவரே கொரோனாவால் மரணமடைந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

இதன்மூலம் மன்னாரில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது. (ம-3,285)
















## தடுப்பூசி அட்டை...

யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்தோடு இனிமேல் வைத்தியசாலைக்கு வருவோர் தமக்குரிய தடுப்பூசி அட்டையினை கொண்டு வருதல் மிக அவசியமான ஒன்றாகும்.

எனவே எதிர்வரும் காலத்தில் பொது மக்கள் இந்த கொரோனாத் தொற்றில் இருந்து தங்களை பாதுகாப்பதற்கு உரிய வழிமுறைகளை கையாள வேண்டும்.

அத்தோடு அனைவரும் இந்த தடுப்பூசியினை பெறுவதன் மூலம் இந்த தொற்றில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்றார். (ம-3,33)

## +2,423...

ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதன்படி, இந்நாட்டு மொத்த கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 316,192 ஆக அதிகரித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## சுயதனிமையில்...

பணியாளர்கள் கோவிட் தொற்றுக்கு உள்ளானமையை அடுத்தே அவர், தன்னை சுயதனிமைக்கு உட்படுத்திக் கொண்டுள்ளதாக தெரியவருகிறது.

இந்தநிலையில் கிருமி தொற்று நீக்கல் செயல்முறை காரணமாக எரிசக்தி அமைச்சகம் ஓகஸ்ட் 6ஆம் திகதி வரை மூடப்படும் என்று அமைச்சர் கம்மன்பில தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழில் இருவர்...

தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த தெல்லிப்பழையைச் சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும் வல்வெட்டித்துறையைச் சேர்ந்த 80 வயதுடைய ஆண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 132ஆக உயர்வடைந்துள்ளது. (ம-3,33)

## வடக்கில் மேலும்...

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவ்வாறு 50 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் - 42 பேர், மன்னார் மாவட்டத்தில் - 06 பேர், கிளிநொச்சி மாவட்டத்தில் ஒருவர், முல்லைத்தீவு மாவட்டத்தில் - ஒருவர் என தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-3)

## கோவிட் கட்டுப்...

ஏ.எம்.எஸ்ஸின் தலைவர் வைத்தியர் லக்குமார் பெர்னாண்டோ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் செலுத்தப்பட்டுவரும் தடுப்பூசி இலக்குகளை அடைந்தவுடன் தளர்வுகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டும். இன்னும் நான்கு முதல் எட்டு வாரங்களில் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்ததும் இந்த தளர்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும்.

ஒரு தொழில்முறை அமைப்பாக, தற்போதைய மோசமான சூழ்நிலையில்

### தடுப்பூசிகள் செலுத்தும்வரை

# நடமாட்டங்களை கட்டுப்படுத்துங்கள்

### பொதுமக்களிடம் மருத்துவ சங்கம் வேண்டுகோள்

(கொழும்பு)

பெரும்பான்மையான மக்கள் கோவிட் தொற்றுக்கு எதிராக தடுப்பூசிகளை செலுத்திக் கொள்ளும் வரை, எதிர்வரும் இரண்டு மாதங்களுக்கு முடிந்தவரை தங்கள் நடமாட்டங்களை கட்டுப்படுத்துமாறு இலங்கை மருத்துவ சங்கம், பொதுமக்களை வலியுறுத்தியுள்ளது.

இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவி வைத்தியர் பத்மா குணரத்ன, கொழும்பில் நேற்று நடத்திய ஊடக சந்திப்பில் வைத்து இந்த கோரிக்கையை விடுத்துள்ளார்.

கோவிட் வைரஸ் நோயாளிகளின் அதிகரிப்பு இப்போது மிக அதிகமாக உள்ளது. நாட்டில் இரண்டாவது முடக்கல் எவ்வாறு கழிந்தது என்பது மக்களுக்குத் தெரியும். இரண்டாவது முடக்கலின்போது நாடு சிறந்த முடிவுகளைப் பெறவில்லை. இந்த நிலையில் பொதுமக்கள் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அத்துடன் வீட்டை விட்டு வெளியே வரும் போது எப்போதும் முகக்கவசம் அணிய வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளார். (ம-3)

முடிவெடுப்பவர்களை எச்சரிப்பது தமது தலையாய பொறுப்பு என்றும் வைத்தியர் லக்குமார் தெரிவித்துள்ளார். (ம-3)

## ஆசிரியர்களின்...

ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

நேற்று அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஆசிரியர், அதிபர் சம்பளக் கொடுப்பனவு, அரச ஊழியர்களின் நெருக்கடி என்பன பற்றி அடுத்த வரவு - செலவுத் திட்டத்தில் கவனம் செலுத்தப்படவுள்ளது.

அரசியல் ரீதியாக வீழ்ச்சி கண்டவர்கள் ஆசிரியர், அதிபர் நெருக்கடியை பாலமாக பயன்படுத்த எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் கூறினார். குறுகிய நோக்கங்களுக்காக ஆசிரியர்களை பயன்படுத்தக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.


கொரோனா வைரஸ் பரவலினால் சகல நாடுகளும் எதிர்நோக்கியுள்ள நெருக்கடிகளைப்போன்று இலங்கையும் சிரமங்களை எதிர்நோக்குவதாக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார். (ம-3)

## கடந்த மே மாதத்...

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் உயிர் வாயு தேவைப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் குறிப்பிடத்தக்களவு அதிகரித்துள்ளது. குறிப்பாக மேல் மாகாணத்தில் உள்ள வைத்தியசாலைகளில் இந்த நிலைமையை அதிகளவில் காணமுடிகின்றது. இந்த நிலைமையில் தினமும் அடையாளம் காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரமாக இருப்பது குறித்து மகிழ்ச்சியடைவது பாரிய தவறு.

மக்கள் சுகாதார சட்டங்களை சரியாக பின்பற்றாது போனால், நோயாளிகளின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம். அப்படி நடந்தால், கடந்த மே மாதத்தில் இருந்த நிலைமைக்கு நாடு செல்லும் எனவும் விஜேவிக்ரம எச்சரித்துள்ளார். (ம-3)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொருளாதாரத்திலிருந்து மீள சிங்களவர்கள் தமிழர்களுடன் ஒன்றிணைய வேண்டும்

# ஆட்சியாளர்கள் சீனாவை நம்புமளவிற்கு தமிழர்கள், முஸ்லிம்களை நம்பவில்லை

## பாராளுமன்றில் சி.வி. விக்னேஸ்வரன்



(கொழும்பு)

**நாட்டின் தற்போதுள்ள பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள வேண்டும் என்றால் சிங்களவர்கள் தமிழர்களுடன் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்.**

**சிங்கள புத்திசாலி மக்கள் தமிழ், முஸ்லிம் மக்களுடன் ஒன்றிணைந்து நாட்டை மீட்டெடுக்க இதுவே சரியான நேரம், ஆனால் சிங்கள ஆட்சியாளர்கள் சீனர்களை நம்பும் அளவிற்கு தமிழர், முஸ்லிம்களை நம்பவில்லை.**

**அதுவே இன்று நாடு நெருக்கடிக்குள் தள்ளப்பட பிரதான காரணமாக அமைந்துள்ளது என தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி. விக்கினேஸ்வரன் பாராளுமன்றில் தெரிவித்தார்.**

பாராளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற 2020 ஆம் ஆண்டுக்கான மத்திய வங்கியின் ஆண்டறிக்கை மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில்,

தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்த்து, எமது முதலீடுகளை நாட்டுக்குள் கொண்டு வந்து, புலம்பெயர் மக்களின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொள்ள புத்திசாலி சிங்கள மக்கள் முன்வர வேண்டும்.

நாட்டின் நெருக்கடி நிலைமையில் இருந்து மீளும் விதத்தில் கைகொடுக்க எமது மக்கள் தயாராகவே உள்ளனர் என்பது அரசாங்கத்திற்கும், சிங்கள புத்திசாலி மக்களுக்கும் கூறிக்கொள்ள விரும்புகிறோம். சிங்கள ஆட்சியாளர்கள் சீனர்களை நம்பும் அளவிற்கு தமிழர், முஸ்லிம்களை நம்பவில்லை, அதுவே இன்று நாடு நெருக்கடிக்குள் தள்ளப்பட பிரதான காரணமாக அமைந்துள்ளது.

எனவே சிங்கள புத்திசாலி மக்கள் தமிழ், முஸ்லிம் மக்களுடன் ஒன்றிணைந்து நாட்டை மீட்டெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவே நாட்டின் நெருக்கடி நிலையில் இருந்து மீள ஒரே வழிமுறையாகும் என்றார். (ம-03)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

**றாஜ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (7554)


## மரண அறிவித்தல்

பிறப்பு 28 - 12 - 1955



இறப்பு 03 - 08 - 2021

### திருமதி கமலேஸ்வரி (பேபி) இராசேந்திரன்

ஏழாலை மேற்கை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி கமலேஸ்வரி (பேபி) இராசேந்திரன் நேற்று (03.08.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் (MR) - அரியமலர் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும் இராசேந்திரத்தின் (இளைப்பாறிய மக்கள் வங்கிப் பணியாளர்) அன்பு மனைவியும் ஜெகன் (பிரான்ஸ்), ஜெனகன் (DFCC வங்கி) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேஸ்வரன், அழகேஸ்வரி, வரதராசன் (கனடா), பாஸ்கரன், பிரபாகரன் (கனடா), விஜயகுமார் (கனடா), இந்திரகுமார் (பிரான்ஸ்), ஜெயக்குமார் (கனடா), புஸ்பராசா (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இராசதுரை, காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் ஞானமலர் ஆகியோரின் அன்பு மருமகளும் கமலேஸ்வரன், சாந்தமலர், காலஞ்சென்ற நேசமலர் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.08.2021) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஏழாலை உசத்தியோடை இந்து மயானத்திற்கு ஏடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். (7558)

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

தகவல்:-
குடும்பத்தினர்


**A/L Physics Online Classes**
வெப்பவியல் Past Paper Questions Only
ஆரம்பம் : 05.08.2021 (நாளை)
ஆரம்ப வகுப்பில் இலவசமாக இணைந்துகொள்ள
ID. 9386077951 Pass code . 122
074 136 5446 இலக்கத்திற்கு Yes என Whatsapp செய்து Tute ஐ பெற்றுக்கொள்ளவும்.
Mr. C. Thivyan B.Sc, PGDE
(யாழ். தேசியப் பாடசாலை ஆசிரியர்) (7557)


## கிளிநொச்சியில் 33 பேருக்கு கொரோனா

கிளிநொச்சி ஆடைத்தொழிச்சாலையில் நேற்றையதினம் நடத்தப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் 29பேருக்கு கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது கிளிநொச்சி அறிவியல் நகரில் அமைந்துள்ள மத்தியவங்கியின் கிளை அலுவலகத்தில் பணிபுரியும் 04 பேருக்கும் நேற்றையதினம் கொரோனாத்தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட சுகாதாரபணிப்பாளர் தெரிவித்தார்.(ம-03.316)


**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. (நிலப்பரப்பு) 1 1/2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன் தெல்லிப்பளை வைத்தியசாலை பின்புறத்தில் இருந்து 400 மீற்றர் தூரம்.

பார்வையிடும் நேரம் :
காலை 8.00 மணி தொடக்கம் மாலை 6.00 மணி வரை
தரகர் தேவையில்லை.
1 1/2 பரப்பின் விலை 10 இலட்சம்
077 814 7389, 077 614 7333 (7546)

**அண்ணா** EXPRESS
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/= 070 3305500 077 888 9388 (C-2439)
976,கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**காண்டம் பார்த்தல்**
உங்கள் வாழ்வில் நடந்த மற்றும் நடக்கப் போகின்ற அனைத்து விடயங்களையும் மிகவும் துல்லியமாக கணித்துத் தருகின்றோம். (7544)
தொடர்பு: 076 835 1932, 021 223 2222 (உரும்பிராய்)

**விரைவு பொதிகள் சேவை**
V2 TRAVELS
UK-1000/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
0768226240 DHL (C-2438)

**பணியாளர் தேவை**
யாழ். நகரில் இயங்கும் விற்பனை முகவர் ஊடாக கொழும்பில் இயங்கும் நிறுவனத்திற்கு விற்பனைப் பிரதிநிதி தேவை.
( யாழ். மாவட்டத்துக்கானது. )
☎.076 986 5238 (7555)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org